விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 14 வியாழக்கிழமை (28.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 160




# ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு பெரு வெற்றி

## வாக்கெடுப்பில் சாதகமான முடிவுகள்

(ஜெனீவா)

இலங்கை விவகாரம் குறித்து ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கடந்த 2 நாட்களாக நடந்த அவசர மாநாட்டில் இலங்கை அரசுக்கு சாதகமான முடிவுகள் கிடைத்துள்ளன. இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்துக்கான வாக்கெடுப்பில் 22 நாடுகள் எதிராகவும் இலங்கை சமர்ப்பித்த பிரேரணைக்கு ஆதரவாக 29 நாடுகளும் வாக்களித்துள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டணி வலியுறுத்து

வடக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி அரசாங்கத்தைக் கோரியுள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.


யாழ்.மாநகர சபை, வவுனியா நகர சபை ஆகிய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை அரசு அறிவித்துள்ளது. ஜனநாயக சமூகத்தில் தேர்தல்கள் மக்கள் தேர்வு என்பன முக்கியத்துவம் வாய்ந்தவை. எனினும் எமது மக்களின் ஒரு பகுதியினர் பெரும் இழப்புகளை சந்தித்து சொல்லொணா அவலத்திற்கு முகம் கொடுத்து முகாம்களிலும் வைத்திய சாலைகளிலும் வாழ்கின்றனர்.

இவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டிய இன பந்துக்களில் கணிசமானோர் தேர்தல் அறிவித்துள்ள மாநகர, நகர சபைப் பகுதிகளில் வாழ்கிறார்கள். இவற்றை மனம் கொண்டு சிறிது காலத்துக்கேனும் தேர்தலை ஒத்தி வைப்பது அவசியமானது என கருதுகிறோம்.

வடக்கில் வசந்தம் வீசவேண்டும், ஜனநாயகம் மிளிரவேண்டும். எனினும் யுத்தம் முடிந்த கையோடு தேர்தல் நடைபெறுவது பொருத்தமற்றது என நாம் கருதுகிறோம். தேர்தலை சிறிது காலத்துக்கேனும் ஒத்திவைக்குமாறு அரசைக் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ச)

## சர்வதேச தரத்திற்கு அமைவாக நலன்புரி முகாம் பேணப்படவேண்டும்

### ஜோன் ஹோம்ஸ் தெரிவிப்பு



(நியூயோர்க்)

இலங்கையில் அகதி முகாம்கள் சர்வதேச தரத்திற்கு அமைவாக பேணப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதி ஆணையாளர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் அதற்கு சில காலம் தேவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது அகதி முகாம்களை நேரில் (12ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2

## பிரபாகரனுடன் தொலைபேசியில் உரையாடியவர்களின் விபரம் பதிவு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்ட போது அவர் வைத்திருந்த சற்லைற் தொலைபேசி, துப்பாக்கி போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

சற்லைற் தொலைபேசியின் சிம் அட்டையை எடுத்து இலங்கை இராணுவ உளவுப் பிரிவினர் ஆராய்ந்தனர். அந்த தொலைபேசியில் அவர் பேசிய இலக்கங்கள் அவருக்கு வந்த தொலைபேசி இலக்கங்கள் அனைத்தும் பதிவாகி உள்ளன.

இதன் மூலம் பிரபாகரனுடன் யார்-யார்? பேசியுள்ளனர். அவர் யாருக்கெல்லாம் அழைப்பு எடுத்து பேசி இருக்கிறார் என்ற விவரங்களை கண்டு பிடித்து உள்ளனர்.

தமிழக மற்றும் (12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் டெங்குக் காய்ச்சல் தீவிரமாகப் பரவுகிறது

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவி வருவதால் பொது மக்கள் விழிப்புடன் இருந்து நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## கே.பியைக் கைது செய்ய பொலிஸார் வலை விரிப்பு

(லண்டன்)

விடுதலைப் புலிகளின் சர்வதேச ஆயுதக் கொள்வனவாளரும் கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதனைக் கைது செய்ய சர்வதேச பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

இவரது மறைவிடங்கள் என்று கருதப்படும் தாய்லாந்து, மலேசியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் மற்றும் சில நாடுகளில் அவர் தொடர்பான புலன் விசாரணைகளை சர்வதேச பொலிஸார் (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனுக்கு என்ன நடந்தது? பி.பி.சி. செய்தியாளர் ஆய்வு

(லண்டன்)

வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற போரில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாக இலங்கை இராணுவமும், விடுதலைப் புலிகளின் சர்வதேச உறவுகள் பிரிவுத் தலைவர் செல்வராசா பத்மநாதனும் அறிவித்துள்ள போதிலும் பிரபாகரன் இறக்கவில்லை என்று ஒரு பிரிவினர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

இந்த முரண்பட்ட நிலைப்பாடுகளின் பின்னணிகளை பி.பி.சியின் செய்தியாளர் ஒருவர் ஆராய்ந்துள்ளார். அவரின் ஆராய்வு வருமாறு,

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இலங்கை இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் கொல்லப்பட்டுவிட்டார் என்பதனை கடந்த வாரம் அந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சட்டத்திற்கு அமைய சரணடைந்த புலிகளுக்கு புனர்வாழ்வு

### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

பாதுகாப்புத் தரப்பினரிடம் சரணடைந்துள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களை சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் பிரகாரம் கவனிப்பதற்கும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய புனர்வாழ்வளிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய எஞ்சியுள்ள சந்தேக நபர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பகுதியில் இராணுவ கொமாண்டோ அணி தேடுதல்

### 11 புலிகளின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதியில் நேற்று இராணுவ கொமாண்டோ படையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஒன்றின்போது 11 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் தரப்பு கூறுகின்றது.

அந்தக் காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் மறைவிடம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்ட சமயம் இரு தரப்பினருக்கும் இடையில் மோதல்களும் இடம்பெற்றுள்ளன. பாதுகாப்புத் தரப்பு (12ஆம் பக்கம் பார்க்க)

# புதிய செயலர்களின் நியமனம் குறித்து ஒரு வாரத்தில் தீர்மானம் எடுக்கப்படும்

## உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவிப்பு

(திருகோணமலை)

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் நிலவும் செயலாளர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் ஒரு வாரத்தில் தீர்மானம் எடுக்கப்படுமென வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜோன்ஸன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் தற்போது கடமையாற்றி வரும் செயலாளர்களின் பதவிக்காலம் முடிபடையும் நிலையில் புதிதாக செயலாளர்கள் நியமிக்கப்படுவார்களா அல்லது தற்போதுள்ள செயலாளர்களின் பதவிக்காலம் நீடிக்கப்படுமா எனக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் மேற்படி விடயம் தொடர்பில் இதுவரை தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லையெனவும் ஒரு வாரத்திலேயேமுடிவு செய்யப்படுமெனவும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜோன்ஸன் குறிப்பிட்டார்.

இதேவேளை உள்ளூராட்சி உதவியாளர்களாக கடமையாற்றுபவர்களை உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களாக நியமிக்கப்படவேண்டுமென தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பிரகாரம் உயர் நீதிமன்றம் மேற்படி பதவிக்கு புதிதாக நேர்முகப்பரீட்சை நடத்தக்கூடாது என தடை உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஏ-9 வீதியை திறப்பதற்கு இராணுவத்தின் அனுமதி இல்லை

## அமைச்சர் எக்கநாயக்க தகவல்

யாழ்ப்பாணத்துக்கும் கண்டிக்கும் இடையிலான ஏ-9 வீதியைத் திறப்பதற்கு இராணுவத்தினரிடமிருந்து இன்னமும் அனுமதி கிடைக்கவில்லையென பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் டபிள்யூ.பீ .எக்கநாயக்க கூறினார்.

ஏ-9 வீதியின் புனரமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ள போதும் அதனைத் திறப்பதற்கான திகதி தொடர்பில் இராணுவத் தரப்பில் எந்த விதமான இணக்கப்பாடும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லையென அவர் குறிப்பிட்டார்.

எனினும் யாழ். குடாநாட்டுக்கான பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் ஏ-9 வீதியூடாக செல்ல அனுமதிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பெரும்தெருக்கள் அமைச்சுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுப்பப்படும் லொறிகள் அநுராதபுரத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அடைக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணத்தில் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்படும் என எக்கநாயக்க கூறினார்.

அதேநேரம் 86 கிலோ மீற்றர்நீளம் கொண்ட ஏ-32 வீதியின் 12 கிலோ மீற்றர் தூரம் புனரமைக்கப்பட்டு விட்டதாகத் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அந்தப் பாதையை திறப்பதாயின் முழுமையான அறிக்கை கிடைக்கப்பட்ட பின்னரே தீர்மானிக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-5)

# அனுமதி அட்டை கிடைக்காதவர்களும் கல்விமாணிப் பரீட்சைக்குத் தோற்றலாம்

## யாழ்.மாவட்ட இணைப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் .மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள கல்விமாணி தெரிவுப் பரீட்சைக்கு அடிப்படைத் தகைமைகளுடன் விண்ணப்பித்து இதுவரை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்களும் பரீட்சைக்கு தோற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்தமை தொடர்பான உரிய ஆதாரங்களுடன் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கு தோற்றும் அனைவரும் தேசிய கல்வி நிறுவகத்தின் பெயரில் இலங்கை வங்கியில் 100 ரூபாய் பணம்செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினையும் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கொழும்பில் துப்பாக்கிச் சூடு தமிழ் வர்த்தகர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு புதுச்செட்டித் தெருவில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் தமிழ் இளம் வர்த்தகர் ஒருவர் படுகாயமடைந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர் சற்குணராஜா விமலன் (வயது 26) எனவும் அவரது வீட்டிற்கு அருகிலேயே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

அத்துடன் ஆட்டோ ஒன்றில் வந்தவர்களே துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பி சென்றிருப்பதாகவும் சம்பவத்தில் கைத்துப்பாக்கி ஒன்றே பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த தமிழ் வர்த்தகர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக்வும் இச் சம்பவம் தொடர்பாக கொட்டாஞ்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# முல்லைத்தீவில் வெடிபொருட்கள் மீட்பு

முல்லைத்தீவின் பல்வேறு பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் படையினரால் பெரும் தொகையான ஆயுதங்கள் மற்றும் ஐந்நூறு கிலோ கிராமுக்கும் அதிகமான நிறையுடைய அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

மீட்டெடுக்கப்பட்ட பொருட்களில் ரி.என்.ரி ரக அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் 260 கிலோ, ரி.என்.ரி சிலப் 85 கிலோ, குண்டுகளை வெடிக்க வைக்க பயன்படுத்தப்படும் மூலவெடி பொருட்கள் 83 கிலோ,பெட்ன் ரக வெடி பொருட்கள் 11 கிலோ, சி4 ரக அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் 36 கிலோ, கறுப்புப்பவுடர் 13கிலோ, வெடி பொருட்கள் 16கிலோ போன்ற பலதரப்பட்ட வெடிபொருட்கள் அடங்குவதாகவும் அவர் கூறினார். (ச-5)

# வன்னியில் காயமடைந்த மக்களை அமைச்சர் டக்ளஸ் பார்வையிட்டார்

(வவுனியா)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று மாலை வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ் கலவன் பாடசாலைக்கு விஜயம் செய்து வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து காயப்பட்ட நிலையில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களைப் பார்வையிட்டார்.

வவுனியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டு கடந்த 25ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று மாலை மேற்படி பாடசாலைக் கட்டிடத்திற்குச் சென்று அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள காயமடைந்துள்ள நூற்றுக் கணக்கான மக்களைச் சந்தித்து அவர்களது உடல் நிலை ,பிற குறைபாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பில் தனித்தனியாக கலந்துரையாடியதுடன் இம்மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு உடனடியாகத் தீர்ப்பதாக உறுதியளித்துள்ளதுடன் இம்மக்களுக்கு தனது ஆறுதல்களையும் தெரிவித்துள்ளார் என அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



வன்னி மக்கள் துயர்துடைப்பு செயற்பாட்டுக் குழுவிடம் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் பஞ்சாட்சரம் பிஸ்கட் வகைகளை கையளிப்பதையும் அக் குழுவின் காப்பாளர் ஜ. ரங்கேஸ்வரன், ஊடக இணைப்பாளர் இ.சதீஸ் ஆகியோர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய நலன்புரி முகாமிலுள்ள மக்களுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

## விமல் வீரவன்சவின் புத்தகத்திற்கு தடையுத்தரவு

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவினால் எழுதப்பட்ட 'அத்த வெனுவட்ட நெத' (Aththa Wenuwata netha) என்ற நூல் அச்சிடப்பட்டு வெளியிடுவதற்கான இடைக்கால தடை உத்தரவினை நீதிமன்றம் நேற்று விதித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சோமவன்ச அமரசிங்கவினால் இப்புத்தகம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிமன்றத்தால் இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச-5)


## கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவு, பாணாவிடை சிவன் தேவஸ்தான. வளர்ச்சிக்கும் ஊரதீவுக் கிராமத்தின் வளர்ச்சிக்கும் முன்னின்று உழைக்கும் சமூக சேவையாளர் **சி.சுந்தரலிங்கம்** அவர்களின் பாசமிகு மனைவி

**திருமதி சதாலட்சுமி சுந்தரலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி !

**7ஆம் வட்டாரம்,**
**புங்குடுதீவு.**

**S.K.சண்முகலிங்கம் (JP)**
**குடும்பம்.**

(C-2510)


## ஆக்கத்திறன் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வல்வை சிவகுரு வித்தியாசாலையில் மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சிக் கல்வி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். (ச-3)

## நிறுவனத் தலைவர்களுக்கான கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான யூன் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கலந்து கொள்வார். இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டோர் தவறாது சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலா நிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(அராலி)

வலி .மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்தும் வலிமேற்குப் பிரதேச அராலி குடும்ப முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2மணிக்கு திருமதித.சிவரஞ்சினி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் அராலி முருகமூர்த்தி வித்தியாலய அதிபர் திருமதி தர்மராஜா ஜெகதீஸ்வரி கலந்து கொள்கிறார். (ச-4)


## விற்பனைக்கு

**கோண்டாவில் வடக்கில் சகல வசதிகளுடன் கூடிய தோட்டக்காணி 2 1/2 பரப்பு விற்பனைக்குண்டு.**

*தொடர்பு:*

**பொ.நவரத்தினம்,**
**புலவர் வீடியோ லேன்,**
**கோண்டாவில் வடக்கு.**
**T.P.No:0779587317**

(2778)

## இலவச வகுப்புக்கள்

கொக்குவில் மேற்கு பிடாரி கோவிலுக்கு அண்மையாக தென்னிந்திய திருச்சபையினரால் நடத்தப்பட்டு வரும் பயிற்சி வகுப்புக்கள் முற்றிலும் இலவசம்.

பாடங்கள்:- தையல், மனையியல், ஐசிங், பூவேலை, சாறிவேக், வூல் நூல் வேலை, தமிழ் தட்டெழுத்து, ஆங்கில தட்டெழுத்து,சுருக்கெழுத்து ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

*தொடர்புக்கு:*

தென்னிந்திய திருச்சபை,
அந்திரேயா ஆலயம்,
கொக்குவில் மேற்கு,கொக்குவில்.

(2779)

# இன்று ஒரு தகவல்

## மருத்துவரைச் சந்திக்கும் போது

வக்கீலிடமும், டாக்டரிடமும் பொய் சொல்லக்கூடாது என்று சொல்வது உண்டு.

வக்கீலிடம் பொய் சொன்னால் 'கேஸ்' வீக்காகி விடும். டாக்டரிடம் பொய் சொன்னால் 'உடம்பு' வீக்காகி விடும்.

திருடன் ஒருவன் இருந்தான். திருடுவதும், பொய் சொல்வதும் தான் அவனுக்கு கைவந்த கலை. அவனுக்கு வயிற்றுவலி வந்துவிட்டது.

உடனே டாக்டரிடம் போய் 'எனக்கு வயிறு வலிக்கிறது டாக்டர்' என்றான்.

"உனக்குக் குடிப்பழக்கம் உண்டா?" என்று கேட்டார் டாக்டர்.

''அதெல்லாம் இல்லை'' என்று பொய் சொன்னான் அவன். ஆனால் டாக்டர் உண்மையைக் கண்டு பிடித்து விட்டார். அதன் பின்னர் அவனுக்கு புத்திமதி சொன்னார்.

"இதோ பாரப்பா... உன்னுடைய தொழில் தர்மப்படி நீ பொலிஸிடம் பொய் சொல்லி தப்பிக்க நினைக்கலாம். ஆனால் டாக்டரிடம் பொய் சொன்னால் உனக்குத்தான் இடைஞ்சல்" என்றார்.

ஒரு டாக்டரிடம் நோயாளி போகும்போது எப்படிப் போக வேண்டும்? என்பதைப்பற்றி அந்த திருடனுக்கும் – அங்கிருந்த மற்றவர்களுக்கும் அறிவுரை வழங்க ஆரம்பித்தார் அந்த டாக்டர்.

உதாரணமாக உங்களுக்கு வயிற்றுவலி வந்து விட்டது. ஒரு டாக்டரிடம் போகிறீர்கள். மருந்து சாப்பிடுகிறீர்கள். சரியாக வரவில்லை.

உடனே இன்னொரு டாக்டரிடம் போகிறீர்கள். அப்பொழுது அவரிடம் முதல் பார்த்த டாக்டர், சாப்பிட்ட மருந்து விபரம் என்பவற்றையெல்லாம் மறைக்காமல் சொல்லி விட வேண்டும். அப்பொழுதுதான் அவர் மேற்கொண்டு 'சிகிச்சை' செய்வதற்கு வசதியாக இருக்கும்.

பழைய மருந்து சீட்டு, மருத்துவ அறிக்கை ஏதாவது இருந்தால் மறக்காமல் எடுத்துப் போக வேண்டும். ஆறு மாதத்துக்கு முன்னர் எடுத்த எக்ஸ்ரே தானே, அது இப்பொழுது எதற்கு என்று நீங்கள் நினைக்கலாம். நோயின் ஆரம்ப நிலையை தெரிந்து கொள்ள டாக்டருக்கு அது வசதியாக இருக்கும்.

குடிப்பழக்கம், புகையிலைப்பழக்கம், போதை மருந்து பழக்கம் என்பவை இருந்தாலும் மறைக்காமல் சொல்லி விடவேண்டும். டாக்டர் என்ன உங்கள் மீது வழக்கா போடப் போகிறார்?

டாக்டர் மருந்துச் சீட்டில் என்ன எழுதிக் கொடுக்கிறாரோ அதை அப்படியே வாங்க வேண்டும். மருந்துக் கடையில் போய் நின்று, அந்த முதல் மாத்திரையில் ஆறைக்குறைத்து இரண்டாவது மாத்திரையில் எட்டைக் கூட்டித் தாருங்கள் என்று உங்கள் இஷ்டப்படி சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

கொஞ்சம் மருந்து சாப்பிட்டதும் உடம்பு சரியாகி விட்டது போல் தோன்றும். உடனே சிலர் மருந்து சாப்பிடுவதை நிறுத்தி விடுவார்கள். அது மிகவும் தவறு. நோயெதிர்ப்புக் கலங்களின் வளர்ச்சி இதனால் பாதிக்கப்படும்.

அதனால் டாக்டர் சொல்லும் கால அளவு வரைக்கும் சாப்பிட வேண்டும்.

உங்கள் இரத்த வகை என்னவென்பது உங்களுக்கு எப்பொழுதும் தெரிந்திருக்க வேண்டும். அதையும் டாக்டரிடம் சொல்ல முடிந்தால் வசதியாக இருக்கும்.

இவ்வளவு அறிவுரையும் அந்த டாக்டர் வழங்கினார். எல்லோரும் அக்கறையாக கேட்டுக் கொண்டிருந்தனர்.

டாக்டர் மறுபடியும் அந்த திருடனைப் பார்த்து,

"இப்பொழுது உன் மனதில் உள்ளதை மறைக்காமல் சொல். அதுதான் உனக்கு நல்லது" என்றார்.

அந்தத் திருடன் தயங்கிக் கொண்டே "டாக்டர் உங்கள் பீஸை கூடுமானவரை குறைத்துக் கொள்ளுங்கள். அதுதான் உங்களுக்கு நல்லது" என்றான்.

டாக்டர் திகைத்துப் போய், "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்றார்.

"ஏனெனில், நீங்கள் சொல்லும் பீஸை இன்றிரவு உங்கள் வீட்டில் தான் எடுக்க வேண்டும்?" என்றான்.

டாக்டரிடம் பொய் சொல்லக்கூடாது என்பதற்காக இப்படியா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பாடசாலை சிறுவர்களுக்கான சித்திர, கைவேலை கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயமும் ஜரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் இயங்கும் கடவுளின் குழந்தைகள் அறக்கொடை நிதியமும் இணைந்து 6 வயது தொடக்கம் 15 வயது வரையுள்ள பாடசாலை சிறார்களுக்கான சித்திர, கைவேலைக் கண்காட்சியை நடத்தவுள்ளன.

இக்கண்காட்சி இரண்டு தொகுதிகளாக நடத்தப்படவுள்ளது. உடல் உளரீதியாகப் பாதிப்படைந்தோர், உளக்குறைபாடுடையோர், வறுமைக் கோட்டுக்குட்பட்டோர், சிறுவர் வாழ் வகங்களில் வசிப்போர், போரினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தோர், மெல்லக்கற்போர் ஒரு தொகுதியாகவும் சாதாரணமானவர்கள் மற்றைய தொகுதியாகவும் இக் கண் காட்சியில் பங்குபற்ற முடியும்.

சித்திரம், கைவேலை என்பன எமது குறிக்கோள், எமது தேவைகள், எமது கனவு, எமது விருப்பம், நட்புரிமை எனும் தலைப்புகளில் இடம்பெறுதல் வேண்டும்.

6-8 வயதுடையோர் A4 தாளினையும் 9-15 வயதுடையோர் 60 cm x 45 cm தாளினையும் பயன்படுத்த வேண்டும்.

இக்கண்காட்சி பாடசாலை மட்டத்தில் ஜுன் 5 ஆம் திகதியும் கோட்டமட்டத்தல் ஜுன் 10 ஆம் திகதியும் வலய மட்டத்தில் ஜுன் 23 ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் மாவட்ட மட்டப் போட்டிகள் ஜுன் முதலாம் வாரத்திலும் தேசிய மட்டப் போட்டிகள் சர்வதேச சிறுவர் தினத்திலும் நடத்தப்படவுள்ளது.

பங்குபற்றும் மாணவர்களுக்கு தனித்தனியாக சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் ஆரம்பக்கல்வி, அல்லது விசேட கல்வி அல்லது சித்திர பாட ஆசிரியர்களின் உதவியுடன் மாணவர்களின் ஆக்கங்களைச் சேகரித்து ஒவ்வொரு ஆக்கங்களின் பின்பறத்திலும் பாடசாலை, மாணவர் பெயர், வயது, படிக்கும் வகுப்பு, வகுதி (பாதிப்பு) யின் தாக்கம், அதிபரின் உறுதிப்படுத்துகை என்பவற்றுடன் உரிய கோட்டக்கல்வி அலுவலகத்தில் ஜுன் 8 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-6)

## வடக்கு கிழக்கில் இந்திய எண்ணெய் நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் புதிதாக தமது எரிபொருள் நிரப்பும் நிலையங்களை திறக்கவுள்ளதாக இலங்கை இந்திய எண்ணெய் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுரேஷ் குமார் தெரிவித்தார்.

இலங்கை இந்திய எண்ணெய் நிறுவனத்தின் 150 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் நாடளாவிய ரீதியில் தற்போது உள்ளன.

மேலும் 300 நிலையங்களை புதிதாகத் திறப்பதற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன்படி ஒவ்வொரு நிலையத்துக்கும் 20 மில்லியன் ரூபா வீதம் இத்திட்டத்துக்கு 6 பில்லியன்ரூபாவை ஒதுக்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஓ-6)

## சைவசமய அறிவு நாவன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சரசாலை இந்து மன்றத்தினால் ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதம் நடத்தப்படும் சமய அறிவு நாவன்மைப் போட்டி இம்முறை ஆனிமாத பிற்பகுதியில் நடத்தப்படவுள்ளதாக மன்றத் தலைவர் க. சிவசங்கரநாதன் அறிவித்துள்ளார். (ஓ)



சாவகச்சேரி நகரசபையின் மீசாலை கிளை நூலகத்தில் நடைபெற்ற புத்தக கண்காட்சியை முன்னாள் அதிபர் இ. கைலைநாதன் நாடாவெட்டி திறந்துவைப்பதையும், அருகில் நகரசபை செயலாளர் திருமதி. கு. ஆறுமுகம் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம் :- கல்வயல் நிருபர்)

## இராசி பலன்


*28.05.2009*
*(வைகாசி 14, வியாழக்கிழமை*
*சதுர்த்தி முற்பகல் 9.27 மணிவரை*
*புநர்பூசம் பிற்பகல் 1.27 மணிவரை*
*இராகுகாலம் 1.22-2.52 மணிவரை*
*சுபநேரம் 7.22-8.52 மணிவரை*
*நமிநந்தியடிகள் குருபூசை*
*அக்கினிநாள் முடிபு*

| | |
|---|---|
| மேடம் | சுபகாரியம், உடல் நலக்குறைவு, மனச்சஞ்சலம், தனவிரயம். |
| இடபம் | மனோதைரியம், இஷ்டசித்தி, வாகனசுகம், மாதர் நட்பு. |
| மிதுனம் | போசனசுகக்குறைவு, கௌரவக் குறைவு, சயனசுகக் குறைவு, வேலைச்சுமை. |
| கடகம் | வெகுமானம், நல்ல வரவேற்பு, முயற்சி பலிதம், பெரியோர் உதவி. |
| சிங்கம் | பிறருக்கு உதவுதல், பிரயாண அலைச்சல், புதிய திருப்பம், குடும்பக் கவலை. |
| கன்னி | நண்பர்கள் வருகை, சயனசுகம், குடும்ப மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை. |
| துலாம் | எடுத்த காரியம் கைகூடும், சுவாரஸ்யம், மேன்மை, நல்ல தகவல். |
| விருச்சிகம் | உத்தியோக பங்கம், பிரயாணம், கட்டுப்பாடு, தந்தைவழி உறவு. |
| தனுசு | உடல் நலக்குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், வீண் பகை, கௌரவக்குறைவு. |
| மகரம் | களஸ்திர நன்மை, தேகநலன், பிரயாண நன்மை, நல்ல மரியாதை. |
| கும்பம் | முயற்சி கைகூடும், மனமகிழ்ச்சி, தனவருவாய், ஆரோக்கியம். |
| மீனம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், முயற்சி தாமதம், குடும்பக் க்வலை. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 60 |
| தக்காளி | 350 | 360 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 70 | 80 |
| கோவா | 60 | 80 | 70 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 20 | 40 | 20-50 |
| புடோல் | 50 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 50 | 50-60 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 180 |
| பாகற்காய் | 120 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 80 |
| கரணைக் கிழங்கு | 60 | 60 | 50 |
| பயிற்றங்காய் | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 70 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 |
| கீரை – 1 பிடி | 15 | 20 | 10 |
| தேசிக்காய் | 110 | 120 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 28-30 |






கைதடி நவீல்ட் பாடசாலையின் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் மற்றும் விருந்தினர்கள் மாலையணிவித்து வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர் பா. மதனரூபன் உரையாற்றுவதையும், திருமதி அ.கருணாரட்ணா, ஆசிரிய ஆலோசகர்கள் திருமதி எஸ்.கோகுலதாஸன், திருமதி பி.அம்பிகைபாலன், என்.முருகானந்தன், அதிபர் வி.எஸ்.மகேந்திரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும், மாணவர்களின் கலைநிகழ்வுகளை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரசாலை -நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் யூன் மாதம் 5 ஆம் திகதி 12 மணிக்கு வேட்டைத் திரு விழாவும், மாலை சப்பறமும், 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி -பெரியவளவு மகா கணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் யூன்மாதம் 5ஆம்திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் காலை 10மணிக்கு தீர்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (ஓ-4-17)

✠✠✠

(நெல்லியடி)

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் ஜூன் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை வேட்டைத்திருவிழாவும் மாலை 5மணிக்கு சப்பறத்திருவிழாவும், 6ஆம் திகதி காலை 8.45 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 4 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும்.

மேலும் தேர்த் திருவிழாவன்று காலை 11 மணிக்கு மாணவர்களுக்கான சமய அறிவுத் தேர்வு இடம்பெறவுள்ளது. வெற்றிபெற்றோருக்கான பரிசில்கள் 8 ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்படும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ஓ)

## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான 'ஞானச்சுடர்' வைகாசி மாத இதழ் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வெளியிடப் படவுள்ளது.

இதன்வெளியீட்டுரையை பொலிகண்டி கிராம உத்தியோகத்தர் சி.சிவபாலசிங்கமும் மதிப்பீட்டுரையை யாழப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும் வழங்கவுள்ளனர். (ஓ-35)

## பயிற்சிக் கைநூல் பிரசுரிப்பதற்கான கற்றல் வள உபகரண விபரம் கோரப்பட்டுள்ளது

கல்வியமைச்சின் கற்றல் கற்பித்தல் வள உபகரணத் தயாரித்தலும் பாவனையும் செயற்றிட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப் படவிருக்கும் வலயமட்ட கற்றல், கற்பித்தல் வள உபகரணத்தயாரித்தல் பாவனைக்குரிய பயிற்சிக் கைநூலில் பிரசுரிப்பதற்காக பாடசாலை ஆசிரியர்கள், அலுவலர்களிடமிருந்து புதிதாக உருவாக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் வள உபகரணங்களின் விபரமும் மாதிரியும் கல்வியமைச்சினால் கோரப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

புதிய கற்றல் வள உபரணங்கள் பின்வருவனவற்றில் ஒன்றாக அமையலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- கட்புலசாதனங்கள்
- உபகரணம்
- செவிப்புலசாதனம்
- கட்டுருவாக்கப்பட்ட கண்காட்சி உபகரணம்
- மாதிரி உரு
- கரும்பலகை, வெண்பலகை சம்பந்தப்பட்ட புதிய கண்டுபிடிப்பு உகரணங்களும் பாவனையும்

இதன்பிரகாரம் ஒவ்வொரு வலயத்தில் இருந்தும் தகுதி வாய்ந்த கற்றல்,கற்பித்தல் வள உபகரண விபரங்களை ஜூன் 5 ஆம் திகதிக்கு முன் தந்துதவும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்விபரங்களில், வலயம், ஆசிரியர்/அலுவலரின் பெயர்,திணைக்களம்/பாடசாலை, உபகரணம் பாவிக்கப்படும் வகுப்பு, பாடம், அலகு,உபகரணம் சம்பந்தப்பட்ட விளக்கக் குறிப்பு ஆகியன உள்ளடக்கப்பட வேண்டும். (ஓ-6)




## கோப் சிற்றி திறப்பு

(மருதங்கேணி)

புலோலி ப.நோ.கூ. சங்கம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக கூட்டுறவு நகர் (கோப்சிற்றி) ஒன்று திறக்கப் பட்டுள்ளது.

இதை பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் திறந்துவைத்தார்.

இவ் கோப் சிற்றியினால் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை ஊழியர்கள், நோயாளர்கள், சிகிச்சை பெறவருவோர் பெரும் நன்மை அடைவார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இச் சங்கத்தினால் மேலும் இரு கோப் சிற்றிகள் திறக்கப்படவுள்ளதாக சங்கத்தின் தலைவர் ந. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவை கற்கோவளத்திலும், அல்வாய் வடக்கிலும் திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஓ-35)

## கந்தபுராணப் படிப்பு

(மருதங்கேணி)

தென்புலோலி உபயகதிர்காம சக்கர சண்முக ஆலயத்தின் வருடாந்த கந்த புராணப் படிப்பு எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 48 நாட்கள் படிப்பு நடைபெறும்.

இந்நிகழ்வில் யூன்மாதம் 19ஆம்திகதி வெள்ளிக்கிழமை மகேந்திர காண்டமும், யூலை 7ஆம் திகதி சூரபன்மன் படலமும், யூலை 17 ஆம் திகதி வள்ளி திருமண படலமும், படிக்கப்பட்டு புராணப் படிப்பு நிறைவடையும். (ஓ-35)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 இற்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாடுகள் பாடத்தில் செயன்முறைகளைத் திட்டமிடலும் வடிவமைத்தலும் தொடர்பான செயலமர்வு எதிர் வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு குறிப்பிடப்பட்ட ஆசிரியர்கள் தவறாது சமூகமளிக்குமாறு யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## நல்லை ஆதீனத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள இராம கிருஷ்ண மிஷன் கொழும்புக் கிளை உப தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தாஜி மகராஜ் இன்று வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை இந்து அமைப்புக்களின ஒன்றியம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)

## தமிழ்த்தினப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(அல்வாய்)

பருத்தித்துறை கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தால் 31 ஆம் திகதி நடைபெறமாட்டாது எனவும் கல்வியமைச்சின் சுற்றுநிருபத்தில் சில குறைபாடுகள் இருப்பதால் புதிய சுற்றுநிருபம் வெளிவரும் வரை இப் போட்டியை ஒத்திவைக்குமாறும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்துள்ளார். (ஓ-4-19)

## வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களை மேம்படுத்துவதற்கான திட்டம்

(யாழ்ப்பாணம்)

வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இத் திட்டத்தில் கோழிக்குஞ்சுகள் வழங்கல், வீட்டுத்தோட்டம் அமைத்தல், நீரிறைக்கு[ம்] இயந்திரம் வழங்கல்,மூக்குக் கண்ணாடிகள் வழங்கல், வாழை,தென்னை, மரக்கன்றுகள் வழங்கல், பழமரக் கன்றுகள் வழங்கல், 3 மாதங்களுக்கு சிறுவர்களுக்கு பால், பாடசாலைகளுக்கு சூரிய ஒளி மின்கலம் போன்ற செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு திட்டங்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் 5 குடும்பங்களை தெரிவுசெய்யும்படி பிரதேச செயலகங்களுக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (ஓ-30)

## ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய மரபுரிமைகள் அமைச்சின் அனுசரணையுடன் வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கானது போட்டிக்கு சிறுகதை, கவிதை, குறும்படப் பிரதியாக்கம், கட்டுரை போன்ற ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

ஆக்கங்கள் அனுப்புவதற்கான இறுதித் திகதி யூன்மாதம் 30 ஆம் திகதி ஆகும். இப் போட்டிக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்கள் அந்தந்த பிரதே செயலாளருடன் / கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு பண்பாட்டலுவல்கள் உதவிப் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## ஆக்கத்திறன் கண்காட்சி

(அல்வாய்)

வல்வைசிவகுரு வித்தியாசாலை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் 3 மணிவரை வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் ஆக்கத்திறன் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் வருகை தந்து பார்வையிட்டு மாணவர்களை ஊக்குவிக்குமாறு கேட்கப்படுகின்றனர். (ஓ-4-19)

## வாரத்தில் இரு நாட்கள் மீன் பிடிப்பதற்கு அனுமதி

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள கடலேரிகளில் செவ்வாய், வியாழன் தினங்களில் மீன்பிடிக்க கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். ஆழ்கடலுக்கு செல்லாமல் குறுங்கடல்களில் மீன்பிடிக்குமாறு மீனவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. விடுவலை, தூண்டில், களங்கட்டி, வீச்சுவலை மூலம் மீனவர்கள் தற்பொழுது மீன்பிடித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-72)

# ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம்

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு ஆற்றவேண்டிய சேவைகளை இதயசுத்தியுடனும், அர்ப்பணிப்புடனும் சிறந்த நிதி முகாமைத்துவம், நிதிக் கட்டுப் பாடு என்பவற்றைப் பின்பற்றியும் செய்யவேண்டும் என யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.**

**இதுதொடர்பாக அரச அதிபரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கை வருமாறு,**

2006 ஓகஸ்ட் மாதத்தில் ஏற்பட்ட நிலவரத்தினால் அத்தியாவசியத் தேவைப் பொருட்களான அரிசி,சீனி,மா,பருப்பு உட்பட சகல பொருட்களும் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டு 24 ப.நோ. கூ.சங்கங்களின் 523 கிளைகள் ஊடாக விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் இப் பொருட்களைப் ப.நோ.கூ.சங்கங்களுக்குக் கடனில் கொடுப்பதற்குரிய அனுமதியை வழங்காதிருந்த பொழுதிலும், மாவட்டத்தில் வதியும் 5இலட்சத்து 60 ஆயிரம் மக்களுக்குரிய உணவுத் தேவையைக் கவனத்தில் எடுத்து சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கும் கடன் அடிப்படையில் பொருட்கள் வழங்கப்பட்டு விநியோகம் மேற்கொள்ளப்பட்டன.

இப் பொருட்களுக்குரிய கட்டளைகளை வழங்கும் பொழுது பொருட்களின் விற்பனை மூலம் பெறப்படுகின்ற பணம் உடனடியாகத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் எனவும், அவ்வாறான ஏற்பாடுதான் தொடர்ந்து விநியோகங்களை மேற்கொள்வதற்கு உதவியாக இருக்கும் எனவும் பல்வேறு கூட்டங்களிலும், கடிதம் மூலமும் ப.நோ.கூ சங்கங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு இறுதி வரை இச் செயற்பாடு சீராக இருந்ததுடன், ப.நோ.கூ.சங்கங்கள் தமது விற்பனை பணங்களை ஓரளவு ஒழுங்காகச் செலுத்தியும் வந்தன. நிறுவைகளில் ப.நோ.கூ. சங்கங்களுக்கு ஏற்பட்ட சோர்வுகளுக்குரிய தொகையும் மாவட்டச் செயலகத்தினால் திருப்பிச் செலுத்தப்பட்டன.

எனவே பொருள் விற்பனையில் எந்தவொரு சங்கமும் நட்டத்தை எதிர்நோக்கவில்லை. 2008 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தனியார் துறை மூலமாகப் பொருட்கள் கொண்டுவரப்பட்ட காரணத்தினால் ப.நோ. கூ.சங்கங்கள் வெளியே பொருட்களைக் கொள்வனவு செய்தவற்குரிய அனுமதி வழங்கப்பட்டது. இந்த அனுமதி வழங்கப்பட்ட பின்பு அததியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் ப.நோ.கூ.சங்கங்களுக்கு கடனில் கொடுக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்து பல சங்கங்கள் தமது சொந்த வியாபாரங்களுக்கு அந்த நிதியைப் பாவிக்கத் தொடங்கின. அத்தோடு அவர்களது வசதிக்காக கடன் அடிப்படையில் பொருட்களை வழங்கும்பொழுது,கொடுக்கப்பட்ட தவணைக்கு ஏற்ப காசோலைகளை எழுதியுள்ள பொழுதிலும் அநேகமான காசோலைகள் வங்கிகளினால் திருப்பி அனுப்பப்பட்டன. இதனால் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினுடைய செல்மதிகள் ஒழுங்காக மாவட்டச் செயலகத்தினால் செலுத்த இயலாத சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. இருப்பினும் மக்களின் உணவுத் தேவை கவனத்தில் எடுக்கப்பட்டுத் தொடர்ந்தும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் ஊடாக அரிசி,சீனி,மா,பருப்பு போன்ற பொருட்கள் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ப.நோ.கூ.சங்கங்களினுடைய செயற்பாடுகள் 2006 ஆம் ஆண்டில் இருந்து மிகவும் நெருக்கமாக மாவட்டச் செயலகத்தினால் அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. *சிறந்த நிதி முகாமைத்துவம், நிதிக் கட்டுப்பாடு, மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற ஆர்வம், ஒழுங்கான நிர்வாகம் என்பவற்றை மேற்கொண்ட ப.நோ.கூ. சங்கங்கள் இன்றும் தமது சங்கங்களின் ஊடாக அத்தியாவசியத் தேவைக்கான பொருட்களை விநியோகிக்கக் கூடிய நிலையில் உள்ளன.*

இருப்பினும் பல சங்கங்கள் மேற்கூறிய அம்சங்களைக் கவனத்தில் எடுக்காது ப.நோ. கூ.சங்கத்தின் பணத்தினைத் தமது சொந்தச் சொத்தாகக் கருதிச் சரியான முறையில் செயற்படாத காரணத்தினால், நல்லமுறையில் செயற்பட்ட சங்கங்களும் தமது சேவைகளைத் தொடரமுடியாமல் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றன.

இதற்குரிய காரணம், மக்களுக்கு அருமையான சேவைகளை ஆற்றுகின்றோம் எனச் சொல்லுகின்ற பல சங்கங்கள் சீரான கணக்குகளைப் பேணாத காரணத்தினாலும், ஒழுங்கான நிதி நிர்வாகம் இன்மையாலும் இற்றை வரை மாவட்டச் செயலகத்திற்கு திரும்பிய காசோலைகள் சம்பந்தமாக 109 மில்லியன் ரூபாவும் பிற் திகதியிடப்பட்ட காசோலைகள் சார்பாக 68 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 177 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. இப்பணம் ப.நோ.கூ. சங்கத்தினால் மாவட்டச் செயலகத்திற்கு செலுத்தப்பட்டால் அன்றி தொடர்ந்தும் அத்தியாவசியப் பொருட்களான அரிசி,சீனி,மா,பருப்பு போன்றவற்றைச் சங்கங்களுக்கு விநியோகிக்க முடியாத நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பணத்தில் மாவட்டச் செயலகத்தினால் சேவைக் கட்டணம்,நிஷா அனர்த்த சமைத்த உணவு செலவு எனப்பவற்றுக்கான மொத்தம் 29 மில்லியன் ரூபா ப.நோ.கூ. சங்கங்களுக்குச் செலுத்தப்படவேண்டியுள்ளது.இப் பணத்தை உடனடியாகச் செலுத்துவதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இன்னும் ஓரிரு தினங்களில் இதற்குரிய வரவுகள் ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்படும். ஒவ்வொரு கூட்டத்திலும் வலியுறுத்தியவாறு ப.நோ.கூ.சங்கங்கள் தங்களுடைய பாவனையாளர்களுக்கு ஆற்றப்பட வேண்டிய சேவைகள் சம்பந்தமாக இதய சுத்தியுடனும், அர்ப்பணிப்புடனும், சிறந்த நிதி முகாமைத்துவம்,நிதிக் கட்டுப்பாடு என்பவற்றைப் பின்பற்றியும் சேவைகளைச் செய்தால் அன்றி மக்களுக்குரிய திருப்திகரமான சேவையை வழங்க இயலாது.

2006 ஓகஸ்ட் மாதத்தில் இருந்து இற்றை வரை ப.நோ.கூ.சங்கங்களுக்கு 7ஆயிரத்து 221 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. இத் தொகையில் 5% வீதமான தொகையைத் தமது வியாபாரத்திற்குச் சேமித்திருந்தாலும் ப.நோ.கூ. சங்கங்களின் கைகளில் தற்பொழுது 361 மில்லியன் ரூபா இருந்திருக்க வேண்டும். எனினும் பெரும்பாலான ப.நோ.கூ. சங்கங்களால் தமக்குத் தேவையான பொருட்களை வாங்கி விற்பனை செய்வதற்குக் கூட நிதி வசதி இல்லாது போவதற்குரிய காரணங்கள் என்பது சம்பந்தப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களும்,கூட்டுறவுத் திணைக்களமும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

எனவே தான் கடந்த 2009.05.19 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ப.நோ.கூ.சங்கங்களின் தலைவர்கள்,பொது முகாமையாளர்களுடனான கூட்டத்தில் இவ் விடயங்கள் அலசி ஆராயப்பட்டு "அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சார்பில் ப.நோ. கூ.சங்கங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் பெறுமதி சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

மேலும் பொருட்களுக்கான தட்டுப்பாட்டுக்கு இன்னுமொரு காரணம் ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன பொருட்கள் வெளிச் சந்தையில் தட்டுப்பாடு ஏற்படும் பொழுது தனியார் வர்த்தகர்களுக்கு மொத்த விற்பனையாக ப.நோ.கூ.சங்கங்களால் விற்பனை செய்வது அவதானிக்கப்பட்டுள்ளது. மிக அண்மையிலும் ஒரு சங்கத்தினால் சீனியும்,மாவும் தட்டுப்பாடாக உள்ளன என்ற நிலையிலும் அப்பொருட்கள் மொத்தமாகத் தனியார் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது.எமது அலுவலர்களினால் நேரடியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயல்பாடுகளும் சந்தையில் தேவையற்ற விலை உயர்வுகளை உருவாக்குகின்றது என்பது சொல்லித் தெரிய வேண்டியது அல்ல.

சங்கங்கள் ஏன் இவ்வாறு செயல்பட்டன என்பதற்கு உரிய சங்கங்களும், கூட்டுறவுத் திணைக்களமுமே விடைகாண வேண்டும். அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்குரிய பணங்கள் செலுத்தப்படாது இருக்கின்ற பொழுதிலும் மாவட்டத்தினுடைய உணவுத் தேவையைக் கருதி உடனடியாக 750 மெ.தொ.சீனியும்,1000 மெ.தொ. கோதுமை மாவும் யாழ்.மாவட்டத்திற்குத் தருவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு,மா ஏற்றிய கப்பல் திருகோணமலையில் இருந்து கடந்த திங்கட்கிழமை (25.05.2009) காங்கேசன் துறையை நோக்கிப் புறப்பட்டுள்ளது. அதே போன்று 750 மெ.தொ.சீனியும் தற்பொழுது கொழும்பில் கப்பலில் ஏற்றப்படுகின்றது.

மாவட்டச் செயலகத்தின் ஒரேயொரு வேண்டுகோள்,மக்களுக்காகச்சேவையாற்ற இருக்கின்ற ப.நோ.கூ.சங்கங்கள் தங்களை அர்ப்பணித்து மக்களுக்கு விசுவாசமாக,உண்மையாக,நேர்மையாகக் கடமையாற்றினால் இவ்வாறான இக்கட்டான சூழ்நிலைக்கு ஏதுவாக இடமில்லை. அதேநேரத்திலே இந்தச் சங்கங்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கின்ற கூட்டுறவுத் திணைக்களத்திடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் சங்கங்களின் நிதி, நிர்வாகச் செயல்பாடுகளைச் சீராக, நெருக்கமாக அவதானிக்குமாறு கேட்டுக்கொண்ட பொழுதிலும்,இன்றும் பலசங்கங்கள் 7ஆயிரத்து 221 மில்லியன் உதவியைப் பெற்ற பின்பும் மேலதிகப் பற்றை புத்தக மீதியாகக் காட்டுவது எதற்காக என்பது அவர்களால் ஆராயப்பட வேண்டிய விடயம் ஆகும்.

சிறந்த முறையில் தங்களுடைய நிர்வாகத்தை மேற்கொண்டு, நல்ல சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்ற சங்கங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு,ஏனைய சங்கங்களும் அவர்கள் பாதையில் சென்று தமது பாவனையாளர் களுக்குச் சிறந்த, அர்ப்பணிப்பான சேவையை ஆற்றுகின்றோம் என்ற ஆத்ம திருப்தியை அடையக் கூடிய விதத்தில் செயல்படுவதற்கு இன்னும் இடமிருக்கிறது என்பதை இவ்விடத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற கருத்தைத் தாரக மந்திரமாக வைத்துச் செயல்படுகின்ற சங்கங்கள் தான் மக்களுக்குச் சிறந்த சேவையை ஆற்ற இயலும். அண்மையில் பத்திரிகைகளில் வந்த கருத்துக்களுக்கும், மாவட்டத்தில் உள்ள நிலைமையை நெருக்கமாகஅவதானித்தபின்பும் இவ்வாறானஅறிக்கையொன்றை பத்திரிகை களில் விடுவதற்கு மாவட்ட நிர்வாகம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இதற்காக மனம் வருந்து கிறேன்.

# தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டமைக்கு இந்தியாவே பிரதான காரணமாகும்

## சந்திரசேகரன் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் ஒரு பிரிவினைவாதத்தை தோற்றுவிக்கும் விதத்திலான இந்தியாவின் ஆலோசனைகளுக்கு நாம் செவிசாய்க்கக் கூடாது. தமிழ்மக்கள் இந்தளவுக்கு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமைக்கு பிரதான காரணமே இந்தியாதான். எனவே, இந்தியா தனது பொருளாதார மேலாதிக்கத்தை எமது நாட்டில் நிலைநிறுத்திக் கொள்வதற்காகவே இலங்கைப் பிரச்சினை தொடர்பில் அக்கறை செலுத்துவதாகக் காண்பித்துக் கொள்கிறது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொடிய யுத்தத்தால் இலட்சக்கணக்கான மக்கள் இன்று அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் பல்வேறு துயரங்களுக்கு மத்தியில் அங்கு வாழ்வைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.எனவே, அரசாங்கத்தின் பிரதான வேலை அங்குள்ள மக்களுக்கு சகல அடிப்படைவசதிகளையும் போதுமான அளவு துரிதமாக பெற்றுக் கொடுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டு அகதிமுகாம்களில் வாழ்ந்து வரும் மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பான முன்னெடுப்புகளை அரசாங்கம் துரிதப்படுத்தவேண்டும்.நீண்டகாலங்கள் அகதி முகாம்களில் இருக்கின்றபோது அவர்களுடைய மனநிலை மேலும் பாதிக்கப்படும். ஏற்கனவே யுத்தத்தால் உடல், உளரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே அவர்கள் இருக்கின்றார்கள்.

எனவே, அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் அரசாங்கம் செயற்படவேண்டும். தமிழர்கள்,சிங்களவர்கள்,முஸ்லிம்கள் என யாவரும் தத்தமது கலை கலாசாரங்களையும் பாரம்பரியங்களையும் பின்பற்றுகின்ற அதே வேளை வாழ்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

வன்னியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வெளிக் காயங்களுக்கு மட்டும் மருந்துகள் போட்டால் போதாது. அவர்களின் உளரீதியான காயங்களுக்கான மருந்துகளையும் அரசாங்கம் கண்டறிந்து போட வேண்டும். அதாவது அவர்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்து அவர்களுடைய சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தி அங்கு பரிபூரண ஜனநாயகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றார். (ஓ-6)

# இலங்கையில் முதலீடு செய்வதற்கு 32 இந்திய கம்பனிகள் இணக்கம்

## ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையும் கிடைத்தது என்கிறார் பீரிஸ்



(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள திருப்பங்கள், அதனால் வலுவடைந்துள்ள சாதாரண சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு இந்தியாவின் 32 பாரிய நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. அத்துடன்,ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ். பி.பிளஸ் சலுகையும் எமக்குக் கிடைத்துள்ளது என்று ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக ஊக்குவிப்பு அமைச்சு ஜி.எல்.பீரிஸ் நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் செஸ்வரி தொடர்பிலான கட்டளைகளை விளக்கி உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்தியாவின் 32 கம்பனிகள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு இணங்கியிருக்கின்றன. இதுதொடர்பில் பேச்சுக்களும் நடைபெற்றுள்ளன. இன்றறைய சந்தர்ப்பத்தில் அவர்கள் இலங்கை வருவதற்கு தயாராக இருக்கின் றனர். இதற்கு முக்கிய காரணங்கள் இங்கு நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கான காலம் அமைந்து வந்திருப்பதும் அத்துடன் எமது நாடு வளங்கள் நிறைந்து காணப்படுவதுமே ஆகும்.

சர்வதேச ரீதியில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் இங்கு பொருளாதார சிக்கல் இருப்பதாகத் தெரியவில்லை. எமது பொருளாதாரக்கொள்கையானது நாட்டின் பொருளாதாரத்துறைக்கு கைகொடுத்துள்ளது.

எமது நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற தேயிலையானது 12.5 வீதத்திலிருந்து 37 வீதமாக உயர்ந்துள்ளது.

ஆடைத் தொழிற்சாலை வீழ்ச்சியடைந்து வருவதாகவும் அதனால் தொழில் இழப்பு உள்ளிட்ட பல்வேறு தாக்கம் ஏற்படப் போவதாக கடந்த காலத்தில் கூறப்பட்டது. ஆனால், அப்படி எதுவும் நடந்துவிடவில்லை.

சிக்கல்களை எதிர்கொள்ளக் கூடிய வல்லமை அரசாங்கத்திடம் இருந்தமையினாலேயே தற்போது பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் கண்டுள்ளோம் என்றார். (ஓ-6)

# தரம் -5 புலமை பரிசில் பரீட்சை- 2009

## மாதிரி வினாத்தாள் -2

க.கைலைநாதன்
யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தி

வினாத்தாள் II

நேரம் :-1 மணி 15 நிமிடங்கள்

I இப்பாடலைப் படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக?

இடர்வரும் போதும் உள்ளம்
இரங்கிடும் போது
உடன் பிறந்தவர் போல் மாந்தர்
உறவு கொள்வார் அப்பா

ஓடும் உதிரத்தில் -வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பாத்தாலும் -சாதி
தெரிவதுண்டோ-அப்பா?

நன்மை செய்பவரே உலகம்
நாடும் மேற்குலகத்தார்
தின்மை செய்பவரே-அண்டித்
தீண்ட ஒண்ணாதார்

1. இடர் என்பதற்கு ஒத்தகருத்துச் சொல் ஒன்று எழுதுக?..............................
2. மாந்தர் என்பதால் கருதப்படுவது யாது? ..............................
3. அம்மா என்பதற்குரிய ஆண்பாற்சொல்லை பாடலிலிருந்து எழுதுக?.......
4. "உள்ளம்" இச்சொல்லை பன்மையாக்கி எழுதுக?..............................
5. உதிரம் என்பதாற் கருதப்படுவது யாது?..............................
6. இப்பாடலில் தேடிப் பார்த்தாலும் தெரியாதது எது?..............................
7. உயர்திணை படர்க்கை ஒருமை பெயர்ச்சொல் எழுதுக?..............................
8. நன்மை என்பதற்கு எதிர்ச்சொல்லை எழுதுக? ..............................
9. உயர்திணை வினைச்சொல்லை தெரிந்து எழுதுக?..............................
10. மனித உடலில் ஓடுவது உதிரம் போல கண்ணில் வடிவது?................

II பின்வரும் பழமொழிகளின் மீதிப்பகுதியை பூரணப்படுத்தி எழுதுக
i. வளரும் பயிரை ..............................
ii.காற்றுள்ள போதே..............................

III சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வசனமாக்குக
1. பிரதான /வெளியிடுவதில் /பத்திரிகை / வகிக்கிறது / செய்திகளை / இடம்

2.தொற்றும்/வைரஸ்கிருமியினால்/ டெங்குக்காய்ச்சல்/ ஒரு / நோயாகும்

Iv. பின்வரும் ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக
i. yesterday..............................
ii. Playground..............................
iii.Green..............................

v. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக?
ஒயகே நம மொகத்த? ..............................
மகேநம சாந்தி..............................

vi பின்வரும் பறவைகளின் அலகுகள் தரப்பட்டுள்ளன அவற்றின் பெயர்களைத் தெரிந்து எழுதுக?
பருந்து, தேன்குருவி, கிளி, மரங்கொத்தி



1.................. 2............. 3............. 4.............

vii பின்வரும் தாவரங்களின் பெயர்களைத்தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக
புளி , கண்டங்கத்தரி, கற்றாளை , ஆமணக்கு சதைகரைச்சான்



1.................. 2.................. 3.................. 4.................. 5..................

*சரியான விடையின் கீழ் கோடு இடுக.*

08. கொத்து கொத்தாக பூக்கும் தாவரம் எது
1. ரோசா 2.சூரியகாந்தி 3. அகத்திப்பூ 4. மல்லிகை

09.தூரஇடங்களுக்கு தபாலை இட வேண்டிய அஞ்சல் பெட்டியின் நிறம்
1. நீலம் 2. மஞ்சள் 3. சிவப்பு 4. கறுப்பு

10. நுளம்புகளை விரட்டுவதற்கு உடலில் பூசப்படும் பதார்த்தம் எது?
1 புல்லெண்ணை 2. கராம்புத்தைலம்
3.மண்ணெண்ணெய் 4.சாதிக்காய் தைலம்.

11. 
அருகேயுள்ள இலட்சனை பொதிகளில் குறித்திருப்பதாகும் அக்குறியீடு குறிக்கும் பெயர் என்ன?
1. உடையக்கூடியது 2. நச்சுத்தன்மையானது
3.கவனமாக கையாளுதல் 4. ஈரலிப்பிலிருந்து பாதுகாத்தல்


12.பாடசாலை மாணவர்கள் தயாரித்து உண்ணக்கூடிய போசனை மிக்க உணவு எது?
1. திரிபோசா 2. நூடில்ஸ் 3 இலைக்கஞ்சி 4. பாற்சோறு

13. இலங்கைக்கு மட்டுமே உரித்தான பறவை எது?
1.மயில் 2.காட்டுச்சேவல் 3. கொக்கு 4. பருந்து

14. கிரிக்கெட் விளையாட்டிற்கான குழு ஒன்றில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை
1.06 2.12 3.11பேர் 4.05 பேர்

15. நீரில் மிக விரைவாகக் கரையக்கூடிய பொருள் எது?
1. சீனி 2. உப்பு 3. சாம்பல் 4. குலுக்கோஸ்

16. கீழேயுள்ள உருக்கள் ஓர் அலவாங்கைப்பயன்படுத்தி கல் ஒன்றை அகற்ற எடுக்கும் முறையைக் காட்டும் சரியான உரு எது



17.மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடம்
1.களனி 2. திருகோணமலை 3. கண்டி 4.அம்பாறை

18.தேசப்படங்களில் நதிகளை காட்டுவதற்கு பயன்படும் நியமநிறம் எது?
1. நீலம் 2. ஊதா 3. சிவப்பு 4. பச்சை

19.காலைச் சூரியஒளியில் இருந்து நாம் பெற்றுக்கொள்க்கூடியஉயிர்ச்சத்துவகை
1. உயிர்ச்சத்து A 2.உயிர்ச்சத்து B 3.உயிர்ச்சத்துD 4.உயிர்ச்சத்து C

20.பற்பசையில் பொறிக்கப்பட்டிருக்கும் இலச்சினை எது ?
1. SLDA 2. ISO 3. SLS 4.SLA

21.தண்டில் காய்க்கும் தாவரம்
1. லொவி 2. மங்குஸ்தான் 3. விளிம்பி 4. திப்பிலி

22. மின்னேரியாக் குளத்தை கட்டுவித்த மன்னன்
1.வசபன். 2. மகாசேனன் 3. தேவநம்பியதீசன் 4. தாதுசேனன்

23.கொல்லர் கம்மாலையில் நெருப்பு எரிய காற்று வழங்கும் உபகரணம் எது?
1.மெழுகுதிரி 2.துருத்தி 3.நெருப்பு 4.கைவில்லை

24.கையில் ஒட்டிய பலாக்காய்ப் பாலை எளிதாக அகற்றப் பயன் படுத்தத்தக்க பொருள்.
1.குளிர்நீர் 2.மண்ணெண்ணெய் 3.வெந்நீர் 4.சவர்க்காரம்

25.சிறுவர்களுக்கு உடல்,உள ரீதியாகவோ துன்பம் விளைவிப்போர் பற்றி அறிவிக்க வேண்டிய தொலைபேசி எண்.
1.123 2.1919 3.119 4.546


26. 
அருகேயுள்ள உடுக்கோலம் குறிக்கும் பெயர் என்ன?
1.வேட்டைக்காரன் 2.தேள்
3.கலப்பை 4.தென்சிலுவை

27.வித்துக்கள் முளைத்தலுக்கு அவசியமில்லாத காரணி எது?
1.ஒளி 2. நீர் 3.வளி 4.தகுந்த வெப்பநிலை

28. 
அருகேயுள்ள விளையாட்டு குறிக்கும் பெயர் யாது?
1.தாயம் போடுதல் 2.கெந்தல் 3.கிளித்தட்டு 4.கிட்டிப்புல்


29.வானவில்லில் காணக்கூடிய வர்ணமல்லாதது.
1.சிவப் 2.கறுப்பு 3.நீலம் 4.மஞ்சள்

30.காந்தம் ஒன்றைப் பயன்படுத்திக் கொண்டு செய்யத்தக்க ஓர் உபகரணம்
1.மின்மணி 2.உலர்மின்கலம் 3.திசையறிகருவி 4.மின்குமிழ்

31. 
நீர் நிரம்பிய ஒரு போத்தலின் வாயைத் தேநீர் வடியினால் மூடி , உருவில் உள்ளவாறு கவிழ்த்துப் பிடிக்கும் போது போத்தலில் உள்ள நீர்.
1.விழாமல் இருக்கும் 2.துளித்துளியாக விழும்
3.மேலே எழும் 4.பெரிய துளியாக விழும்

32."கணக்கவசம்" பாவிக்கப்படுவது எந்த விளையாட்டு வீரர்களால்
1.கரம் 2.நீச்சல் 3.செஸ் 4.டாம்

33.எழுதும் போது பென்சிலை மிகச் சரியாகப் பிடித்து எழுதும் முறையைக் காட்டும் உரு எது?



34.A.G.A எனக் குறிப்பிடப்படுவது
1.சுகாதாரப் பரிசோதகர் 2.பிரதேச செயலாளர்
3.பொலிஸ் அதிகாரி 4.கிராம சேவகர்

35.  அருகேயுள்ள உரு குறிப்பது
1.பற்சில்லு 2. கஸ்பர் வீல்
3.வண்டில் சில்லு 4. மின்மோட்டார்

**பின்வரும் ஒவ்வோர் கூற்றும் சரியாயின் ( √ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் எதிரே அடைப்புக்குறிக்குள் அடையாள மிடுக.**


36. கடலில் வாழும் திமிங்கிலம் ஓர் பாலூட்டியாகும் ( )

37. சூரியனுக்கு மிகவும் கிட்ட உள்ள கோள் வெள்ளி ஆகும் ( )

38.எல்லாத் திண்மங்களுக்கும் உச்சி விளிம்புகள் உண்டு ( )

39.வகுப்பு மாணவர்களுடன் அன்பாகப் பழக வேண்டும் ( )

40.காற்று சக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யலாம் ( )

41. 


அருகே கடிகார முகத்தில் பி.பி.3.35 ஐக் காட்டுகிறது அந் நேரத்தை நியம நேரமாக எழுதுக.

.................................................

42. 29 எனும் எண்ணை உரோமன் இலக்கத்தில் எழுதுக.

.................................................

43.




அருகேயுள்ள உருவின் சுற்றளவு யாது?

.................................................


44.1kg தேயிலையின் விலை ரூபா 160.00 ஆகும். அதன்படி 2 1/2 kg தேயிலையின் விலை யாது?

.................................................

45. இருபத்தைந்தாயிரத்து எண்ணூற்றுப் பதினைந்து இதனை இலக்கத்தில் எழுதுக.

.................................................


46.பின்வரும் உருவில் உள்ள ஒவ்வொரு சதுரத்தினதும் நீளமும் அகலமும் முறையே 1 cm எனக் கருத்திற்கொள்க.




நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது,?

.................................................


47. மூன்று மின்கலம், மின்குமிழ், நான்கு வயர் கம்பித்துண்டுகள் என்பன தரப்பட்டிருப்பின் மின் குமிழை ஒளிரச் செய்யும் விதத்தை வரைக.



48. A.Bஎனும் இரு பென்சில்கள் அளக்கப்பட்ட முறை காட்டப்பட்டுள்ளது எனில் Aபென்சிலை விட B பென்சில் எத்தனை சென்ரி மீற்றர் குறைவு?




(.................................................)

49. 

1.அருகேயுள்ள திண்மத்தளவடிவத்தின் பெயர் யாது?.................................................

2.இதன் விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

.................................................

50. கூட்டுக. 1/6 + 1/3 = .................................................

51.கீழ் வரும் சம்பவத்தினை வாசித்து அதனைத் தொடர்ந்து இடம் பெறும் நிகழ்வுகளை எழுவாய், பயனிலை, செயற்படுபொருளுக்கமைய நான்கு சொற்களுக்கு குறையாமல் ஆறு வசனம் எழுதுக.

'பாடசாலை விட்டுச் செல்லும் போது வாகன நெரிசல் ஏற்பட்டது. ஏன் என்று எவருக்கும் புரியவில்லை அப்போது' அம்புலன்ஸ் வண்டி ஒலி எழுப்பியவாறு வந்து கொண்டிருந்தது.................................................

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________
6. ______________________

## மாதிரி வினாத்தாள் 2
## வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1) 4 | 2) 2 | 3) 1,5,8 | 4) 2,7,9 | 5) 3,6,4 | 6) 2 | 7) 1 8) 2 | 9) 1 10) 2 | 11) 3 |
| 12) 2 | 13) 1 | 14) 2 | 15) 1 | 16) 1 | 17) 2 | 18) 2 19) 1 | 20) 2 21) 1 | 22) 3 |
| 23) 37 | 24) 1 | 25) 2 | 26) 3 | 27) 27 | 28) 5 லீற்றர் 100 மில்லிலீற்றர் | | 29) 1 30) 4 | 31) 4 |
| 32) 3 | 33) 1 | 34) 1 | 35) 4 | 36) 1,4 | 37) 3 | 37) 3 38) 1 | 39) 2 40) 3 | |




கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் கணித விளையாட்டு உபகரணங்கள் வெளியீடும்,இடைநிலைப்பிரிவு மாணவர்களுக்கான "கணித சுயகற்றலுக்கான இறுவட்டு" வெளியீடும் நேற்று முன்தினம் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட டாக்டர் லயன் வை.தியாகராஜா மங்கல விளக்கேற்றுவதையும்,கணித விளையாட்டு உபகரணங்களை யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் அ.வேதநாயகம்,கணித சுய கற்றலுக்கான இறுவட்டை கல்லூரி அதிபர் க.இராஜசேகரம் ஆகியோர் வெளியிட்டு வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:அலுவலகச் செய்தியாளர்)

# கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் மூவர் விரைவில் ஊடகங்கள் முன் தோன்றுவர்

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற போது பாதுகாப்பு வலயத்தில் இருந்த மூன்று அரச ஊழியர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளதாக பல தரப்புக்களால் கூறப்பட்டது.

ஆனால், அவர்கள் இரண்டு வாரங்களில் ஊடகங்கள் மற்றும் மக்கள் முன்தோன்றி தாங்கள் எவ்வாறான அழுத்தங்களுக்கு மத்தியில் கடந்த காலங்களில் ஊடகங்களுக்கு, தகவல் வெளியிட நேர்ந்தது என்பதனை விபரிப்பார்கள் என்று ஊடக துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

குறித்த மூவரும் அரசாங்கத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். விசாரணைகள் முடிவடைந்ததும் அவர்கள் உங்கள் முன் தோன்றுவார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

பாதுகாப்பு வலயத்தில் கடமையாற்றிய சில அரச ஊழியர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளதாக சிலர் தெரிவித்தனர். அவர்கள் கடத்தப்பட்டுள்ளதாகவும் பல்வேறு தரப்புக்களால் தெரிவிக்கப்பட்டு வந்தது. ஆனால் அவர்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளனர். அவர்களிடம் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் இரண்டு வாரங்களில் அவர்கள் மக்கள் மற்றும் ஊடகங்கள் முன் தோன்றுவார்கள். அவர்கள் பாதுகாப்பு வலயத்தில் இருந்தபோது எவ்வாறான அழுத்தங்களுக்கு முகம் கொடுத்தார்கள் என்றும் எதன் அடிப்படையில் அவர்கள் சர்வதேச ஊடகங்களுக்குத் தகவல்களை வழங்கினார்கள் என்றும் ஊடகங்களுக்கு கூறுவார்கள்.

அவர்களின் பெயர்களை நான் தற்போது வெளியிடமாட்டேன். ஆனால் நான் யாரைப் பற்றி கூறுகின்றேன் என்று நீங்கள் ஊகித்துக் கொள்ள முடியும். இரண்டு வாரங்களில் அவர்கள் வெளியே வருவார்கள். என்ன நடந்தது என்பதனை தெரிவிப்பார்கள். அதுவரை பொறுத்திருப்போம் என்றார். (ஓ-6)

# கண்ணிவெடிகள் அகற்றும் பணிக்கு ஜப்பான் அரசாங்கம் 160 மில் ரூபா நிதியுதவி

(கொழும்பு)

வடக்கில் யுத்தம் முடிவுற்றுள்ள நிலையில் அப்பிரதேசங்களில் காணப்படும் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளுக்காக ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு மேலும் 160 மில்லியன் ரூபாவை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மன்னார் பிரதேசத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளுக்காக ஜப்பான் அரசாங்கம் ஏற்கனவே 80 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு உதவியாக வழங்கியுள்ளது. இதன்படி வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளுக்காக ஜப்பான் அரசாங்கம் இதுவரை 240 மில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

தற்போது வழங்கப்படவுள்ள நிதியைக் கொண்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் உள்ள கண்ணி வெடிகள் அகற்றப்படும். இப்பணியை 'டானிஷ் டிமைனிங் குழுவும் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனமும் மேற்கொள்ளும்.

இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் 'கண்ணிவெடிகளற்ற இலங்கை' எனும் இலக்கை அடைவதற்கு தொடர்ந்தும் உதவியளித்து வரும் ஜப்பான், இடம்பெயர்ந்த மக்களைத் துரிதமாக மீள்குடியேற்றும் பணிகளுக்காக கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து சுமார் 2250 மில்லியன் ரூபாவை உதவியாக வழங்கியுள்ளது என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஓ-6)

# அதிகாரப் பகிர்வு முறைமையை சர்வஜன வாக்கெடுப்புக்கு விட வேண்டும்

## பாக்கியசோதி சரவணமுத்து

இன்றைய பிரச்சினைத் தீர்வுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறைமை தேவையாகும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமெரிக்க சமூக மன்றத்தின் புத்தி ஜீவிகள் கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கம் உடனடியாக அரசியல் தீர்வுக்கு செல்ல வேண்டும். அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் அதிகாரங்களை பகிரும் வேலைத்திட்டத்துக்கு அரசாங்கம் செல்ல வேண்டும். அதுதான் தற்போதைய உடனடி தேவையாகவுள்ளது. நலன்புரி நிலையங்களில் உள்ள உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்துள்ள மக்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்யும் வேலைத்திட்டம் உடனடியாக அவசியமாகும்.

முக்கியமாக இடம்பெயர்ந்துள்ள மக்களை முறையாக பதிவு செய்வதற்கான முறைமை ஒன்று அமுல்படுத்தப்பட வேண்டும். காரணம் எதிர்காலத்தில் தேர்தல் நடத்தப்படின் வாக்களிக்க தகுதியுள்ளோர் தொடர்பில் பாரிய பிரச்சினைகள் எழலாம். கொழும்பிலேயே வாக்காளர் பதிவு தொடர்பில் சிக்கல்கள் எழுகின்றன. வன்னிப் பகுதியில் 70 ஆயிரம் மக்களே இருந்ததாக அரசாங்கம் கூறி வந்தது.

ஆனால் வெளிநாட்டு நிறுவனங்களும் சில அரசியல் கட்சிகளும் இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருப்பதாக கூறி வந்தனர். இறுதியில் என்ன நடந்தது?


மோதல் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர்பில் சுயாதீன விசாரணை இடம்பெற வேண்டும். புலிகளோ அரசாங்கமோ யாராக இருப்பினும் விசாரணை இடம்பெற வேண்டும். 20 வருடங்கள் பழமையான மாகாண சபை முறைமை போதுமானதல்ல. அதனை தாண்டி செல்ல வேண்டும்.

அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு முறைமை தேவையாகும். அந்த அதிகாரப் பகிர்வு முறைமையை பொதுத் தேர்தலில் மக்களிடம் முன்வைக்க வேண்டும். அல்லது சர்வஜன வாக்கெடுப்புக்கு விட வேண்டும். (ஓ-6)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற

## வலிகாம கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -09.05.2009

### மானிப்பாய் இந்துக் கல்லூரி





### இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி





அண்டை வீட்டான் பசியோடு இருக்க தான் மட்டும் வயிறாற உண்டு களித்திருப்பவன் உண்மையான மனிதனாக மாட்டான்.

~ நபிகள் நாயகம்

வலம்புரி

## முகாம்களிலுள்ள மாணவர்கள் தொடர்பில் உலக உணவுத் திட்டத்தின் பொறுப்பு

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் பணியில் உலக உணவுத்திட்டம் காத்திரமான பணியை ஆற்றி வருகிறது.

அந்த அமைப்பின் பணியினால் மாணவர் அடையும் நன்மை எதிர்காலத்தின் ஆரோக்கியமான சமுதாயத்திற்குப் பேருதவியாக அமையும்.

'கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது' என்றார் ஔவைப் பிராட்டி.

இன்று ஐந்து வயதிற்குள் மூளை வளர்ச்சியடைவதான கண்டறிவுகளை விஞ்ஞான மருத்துவ உலகம் முன்வைத்துள்ளது.

இதனாலன்றோ இளமையில் வறுமை மோசமானதென ஔவை கூறியிருக்கலாம் என்ற முடிபுக்கு நாம் வரமுடியும்.

அதேநேரம் உடல், உள வளர்ச்சியில் இளமைப் பராயம் முக்கியமானதென்பதால், அந்த வயதினரின் போஷாக்கில் அதீத கவனம் செலுத்துதல் கட்டாயமானதாகும்.

அவ்வகையில் பாடசாலையில் இலவச மதிய உணவு வழங்கும் நடைமுறை காலம் உணர்ந்த உன்னத பணியாகும்.

இந்தப் பணியை ஆற்றிவரும் உலக உணவுத்திட்டம் பாராட்டுக்குரியது. அதே சமயம் உலக உணவுத்திட்டத்திற்கு இன்னுமோர் தார்மீகக் கடமை உண்டு.

அதாவது வன்னியில் நடந்த யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் அவர்கள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

முகாம்களுக்கு அண்மையாகவுள்ள பாடசாலைகளுக்கு குறித்த மாணவர் சென்று வருகின்ற போதிலும், யுத்தத்தின் விளைவாக அவர்கள் போஷாக்கால் பாதிப்படைந்துள்ளனர் என்பது நிறுத்திட்டமான உண்மை.

எனவே இந்த மாணவர்களின் போஷாக்கு நிலையை மேம்படுத்துவதில் உலக உணவுத் திட்டம் காத்திரமான நடவடிக்கைகளை ஆற்ற வேண்டும்.

முகாம்களில் உள்ள மாணவர்களுக்கு மதிய உணவுக்கு மேலாக போஷாக்கு ஆகாரம் வழங்கும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவது கட்டாயமானதாகும்.

ஆகவே மதிய உணவு வழங்கும் உலக உணவுத் திட்டத்தின் மகத்தான பணியைப் பாராட்டும் அதேவேளை யுத்தத்தால் பாதிக்கப்பட்டு முகாம் வாழ்வில் தங்கள் எதிர்காலத்தைத் தொலைத்து விட்டோமோ என்று ஏங்கித் தவிக்கும் மாணவர்களின் போஷாக்கு நிலையில் உலக உணவுத்திட்டம் மேற்கொள்ளும் பொருத்தமான நடவடிக்கைகளே அந்த மாணவர்களின் நம்பிக்கையைப் பலப்படுத்தும்.

இவை யாவற்றுக்கும் மேலாக முகாமில் தங்கியுள்ள மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படுவதுடன், பிரபல்யமான ஆசிரியர்கள் முகாம் மாணவர்களுக்காகத் தங்கள் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையை வழங்கவும் முன்வர வேண்டும்.

# அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டு ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)



மோதல் காரணமாக இடம் பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் பணியாற்ற ஐக்கிய நாடு கள் சபையின் முகவர் நிலையங்களை அனுமதிக்க வேண்டும். அத்துடன் குறித்த முகவர் நிலையங்களின் பிரதிநிதிகளுக்கான பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற இலங்கை அமெரிக்க சமூக மன்றத்தின் புத்திஜீவிகள் கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

தற்போதைய நிலையில் யுத்தம் முடிவடைந்து விட்டது. மக்கள் அதனைக் கொண்டாடுகின்றனர். ஆனால் இதன் பின்னர் உள்ள விடயங்களை நாம் பார்க்க வேண்டியுள்ளது. முக்கியமாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற அரசியல் தீர்வை முன்வைப்பது மிகவும் அவசியமான விடயமாகும். அதற்கான அடிப்படையை உருவாக்க வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையில் சிறுபான்மை என்ற இனத்தவர் இல்லை என்றும் நாட்டை நேசிக்கின்றவர் மற்றும் நாட்டை நேசிக்காதவர்கள் என இரண்டு தரப்பினரே இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. காரணம் அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகியன நாட்டில் இனப் பிரச்சினை இல்லை என்றும் பயங்கரவாத பிரச்சினையே காணப்பட்டது என்றும் கூறி வருகின்றனர்.

புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். இனி அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். ஆனால் சர்வகட்சி பிரதிநிதிகள் குழு என்ற நாடகம் தொடர்ந்து அரங் கேறும் நிலைமை காணப்படுகின்றது.

வடக்கில் தேர்தல் நாடகங் கள் இடம்பெற லாம். 1957 ஆம் ஆண்டு பண்டா- செல்வா உடன் படிக்கை குறித்து ஆராயப்பட்ட போதே ஈழம் என்ற அடிப்படை மக்கள் மனதில் பதிந்து விட்டது. அதன்பின்னர் 1983 ஆம் ஆண்டு பாரிய கலவரம் ஏற்படுத்தப்பட்டது. இனவாதிகளால் அது மேற்கொள்ளப் பட்டது.

இன்று பல்வேறு விடயங்கள் ஆரோக்கிய மற்ற நிலையிலேயே காணப்படுகின்றன. அரசாங்க வானொலியின் தலைவர் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவரை மிகவும் தரமற்ற முறையில் விமர்சிக்கின்றார்.

நாட்டில் சட்டத்தின் ஆட்சிப்படுத்தல் தேவை யாகும். ஜனாதிபதி உடனடியாக அனைத்து உரிமைகளையும் உறுதிப்படுத்தும் வகையிலான தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் ஒன்றுக்கு செல்ல வேண்டியது அவசியமா கும்.

மூன்று இலட்சம் அகதிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அகதி மக்களை மிக விரைவில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நலன்புரி முகாம்களில் ஐக்கிய் நாடுகளின் முகவர் நிலையங்கள் பணியாற்ற அனு மதிக்கப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்தாக வேண்டும். (ஓ-6)

## அகதிமுகாமில் தங்கியுள்ள குழந்தைகளுக்கும் அடையாள அட்டை வழங்க அரசு ஏற்பாடு

(திண்டுக்கல்)

அகதிகள் முகாமில் தங்கியுள்ள குழந்தைகள் முதல் அனைவரும் அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் ஏற்பட்ட போர் காரணமாக தமிழகத்திற்கு அகதிகளாக வந்தவர்கள் 117 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

போர் முடிவுக்கு வந்ததையடுத்து விடுதலைப்புலிகள் தமிழகத்தில் ஊடுருவக்கூடும் என்று உளவுத்துறை எச்சரித்துள்ளது. கியூ பிரிவு பொலிஸார் முகாம்களையும் அங்கு தங்கியுள்ளவர்களையும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

மேலும் ஒரு முகாமை விட்டு மற்றொரு முகாமிற்கு செல்ல வேண்டும் என்றால் அகதிகள் அதிகாரிகளிடம் முன் அனுமதி பெறாமல் செல்லக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்காக முகாமிலுள்ளவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு வழங்குவதோடு குழந்தைகளுக் கும் உடனடியாக அடையாள அட்டை வழங்க அரசு உத்தர விட்டுள்ளது. இதற்காக குழந்தைகளின் வயது மற்றும் போட்டோ பெறப்பட்டு பட்டியல் தயாரிக்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (ஓ-6)

## வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கை நிலைவரத்தை நேரில் பார்வையிட அனுமதிக்க வேண்டும்

### மல்வத்த பீடாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கை நிலைவரத்தை நேரில் பார்வையிட அனுமதியளிக்கப்படவேண்டுமென மல்வத்த பீடாதிபதி வெளிவிவகார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இலங்கை குறித்து சர்வதேச நாடுகளிடையே காணப்படும் பிழையான கருதுகோள்களை களைய வேண்டுமாயின் வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்கப்படவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த பொகொல்லாகம கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்திருந்த போது மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்ததேரர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (ஓ-6)

## நாட்டின் அபிவிருத்தி நடைமுறைக்கு ஊடகங்களின் பங்களிப்பு அவசியம்


### அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தி நடைமுறைக்கு ஊடகத்தின் பங்களிப்பு அளப்பரியது என அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஊழலை ஒழித்து தேசத்தை சுபீட்ச நிலைக்கு உயர்த்த வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கமாக இருக்கிறது. ஆனால் ஒரு சில தனியார் ஊடகங்கள் தமக்குரிய நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் ஊடகங்களை வழி நடத்துகின்றன.

இத்தகைய நிலைமைகளை தவிர்ப்பதற்கு தொடர்பாடல் சட்டங்கள் உள்ளன. எனினும் இலங்கையில் உள்ள வெகுசன ஊடக சட்டங்கள் அதற்குப் போதுமானவை அல்ல என அமைச்சர் குறிப்பிட்டார். எனவே தொலைத்தொடர்பாடல் சார்ந்த புதிய நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-4)

## அறம், பொருள், இன்பம், வீடு, வாழ்வியல் தத்துவங்கள் - பாபா



அறம்,பொருள்,இன்பம்,வீடு என்பது நான்கு உயர்ந்த பொருட்கள் மட்டுமல்ல. அறவழியில் பொருளீட்டி இன்பமடைந்த பிறகு வீடு பேறு அடையவேண்டும். அதாவது இறைபதம் அடைதல், நம் முன்னோர்களிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட வாழ்வியல் தத்துவங்கள் ,வாழ்க்கைக் கண்ணோட்டங்கள் சரியாக வழிகாட்டும் விழுமியங்கள் ஆகியவற்றையே அறம்,பொருள் ,இன்பம்,வீடு உணர்த்தி நிற்கின்றது.

வேத காலத்து ரிஷிகள் உயரிய ஒழுக்கத்தோடு,மன ஒருமைப்பாட்டோடு வாழ்வினைக் கூர்ந்து அவதானித்து விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து,காலத்தால் பரிசோதித்து வாழ்வினை வழமாக்கும் விடயம் எனக் கொண்டவை தான் இவை. நமது முன்னோர்கள் இந்த உலகத்தினை இலட்சியமாகத் தரவில்லை. அழியும் பொருள்களிடையே அழியாப் பொருளாக விளங்கும் இறைவனையே இலட்சியமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

அறம்,பொருள்,இன்பம்,வீடு இவற்றுள் பொருள் சேர்வதையோ ,இன்பம் துய்ப்பதையோ நமது முன்னோர்கள் கண்டனம் செய்யவில்லை. அற நெறியில் பொருள் தேடு, முறையோடு இன்பத்தை நாடு என்றே சொல்லி வைத்திருக்கிறார்கள். அறம்,வீடு,என்ற கரைகளுக்கு நடுவே பொருள், இன்பம் என்ற நதி ஓடினால் வாழ்வு சுபீட்சமாகும்.

ஆனால் பொருள்,இன்பம் என்ற நதி வெள்ளப் பெருக்கெடுத்து அறம்,வீடு என்ற கரைகளை உடைத்துக்கொண்டு செல்லும்போது அது அழிவையே உண்டு பண்ணும்.

இன்றைய உலகில் நமது துன்பங்களுக்கெல்லாம் மூல காரணம் பணம்,பொருள் ஈட்டுவதையும் இன்பம் துய்ப்பதையும் குறியாகக் கொண்டிருப்பதுதான். அறநெறி இறைசிந்தனை என்பவற்றை இம்மியளவேனும் கருதாமை, இதுவே நம்மை வருந்தவைக்கின்றது. இறைவன் அதாவது பரம் பொருள் ஒன்று தான். அதனை எந்த நாமத்தாலும் அழைக்கலாம். எந்த ரூபத்திலும் வணங்கலாம். அதுவே பகவான் பாபாவின் அருட்போதனையாகும்.

எமது வாழ்க்கையில் தொட்டது ,துடைத்தது என்றில்லாது எந்நேரமும் எந்தப் பாவனையோடும் ஏன் இறைவனை எமது ஜென்ம விரோதியாகப் பகைத்துக்கொண்டு தூஷித்தாலும் இறைவன் தனது கருணையை எம் மீது பொழிவார். இறைவன் இருக்கின்றார் என்பவரை விட இறைவன் இல்லை என்பவன் மோட்சத்தை அடைந்தானாம். காரணம் நித்தமும் இறைவன் என்ற சிந்தனையே. நித்தமும் இறையடி சிந்திப்போம். அதனால் நம் பாழ்வினை எல்லாம் அகலும்.

ஜெய்சாயிராம் யாதவன்

# அமெரிக்க ஜனாதிபதியுடன் நேரடி பேச்சுவார்த்தைக்கு தயார்

# அணுசக்தி திட்டத்தை ஒருபோதும் கைவிடப்போவதில்லை

## ஈரானிய ஜனாதிபதி தெரிவிப்பு



(தெஹ்ரான்)

எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் மீளத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடாத்த விரும்புவதாக ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதி நஜாத் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத் தொடரில் பராக் ஒபாமாவுடன் உலகப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாக அவர் கூறினார்.

எனினும் ஐக்கிய நாடுகள் அணுசக்தி முகவர் நிலையத்தின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு அப்பால் ஈரானிய அணுசக்தி நிகழ்ச்சித் திட்டம் குறித்துக் கலந்துரையாட தனது நாடு தயாராக இல்லை என அஹ்மதி நஜாத் வலியுறுத்தினார்.

மேற்குலக நாடுகள் தடைகளை இலகுபடுத்தல், பொருளாதார சலுகைகள் என்பவற்றை வழங்குவதற்குப் பதிலாக ஈரான் தனது முன்னேற்றகரமான யுரேனிய செறிவூட்டல் திட்டத்தை ஒருபோதும் கைவிடப் போவதில்லை எனக்கூறிய ஈரானிய ஜனாதிபதி, அணுசக்தி பிரச்சினை முடிந்த ஒரு விடயம் எனக் குறிப்பிட்டார்.

ஈரானுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்த பராக் ஒபாமா கடந்த மார்ச் மாதம் தனது விருப்பத்தை வெளியிட்டிருந்தார். (ஓ-6)

# 'அய்லா' சூறாவளியால்

# அழிந்தது மேற்கு வங்காளம்

## இதுவரை 62 பேர் பலி

கொல்கத்தா மேற்கு வங்காளத்தில் 'அய்லா' சூறாவளிக்கு பலியானோர் எண்ணிக்கை 45 ஆக உயர்ந்தது. மேற்கு வங்காளத்தில் கடந்த திங்கட்கிழமை 'அய்லா' என்னும் கடும் சூறாவளி காற்று வீசியது. இந்த சூறாவளிக் காற்றால், இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்த சூறாவளிக் காற்றால் தெற்கு பர்கானாசில் 20 பேரும், வடக்கு பர்கானாசில் எட்டுப்பேரும், கொல்கத்தா, ஹவுரா பகுதிகளில் தலாஆறு பேரும், பிர்பும் பகுதியில் மூன்றுபேரும், உயிரிழந்ததாக அதிகாரிகள் வட்டாரங்கள் தெரிவித்தனர்.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பர்கானாஸ் பகுதிகளில் ஹெலிகொப்டர்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன. 'அய்லா' சூறாவளி முடிந்த போதும் அதிக மழை பெய்யும் என்று வானிலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிட்டத்தட்ட ஒரு இலட்சம்பேர் வீடிழந்தனர். சூறாவளியில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிவாரண உதவி தர மத்திய அரசு முன் வந்திருக்கிறது.

சூறாவளியில் வேருடன் சாய்ந்த மரங்கள், தண்ணீர் சூழப்பட்ட பகுதிகள் அழிவின் கோரத்தைப் படம் பிடிக்கின்றன. இதே போல் ஒரிசாவிலும், ஜகத்சிங்பூர், கேந்திரபாரா, கட்டாக் மற்றும் பாலாசூர் ஆகிய மாவட்டங்களும் சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ளன.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் வழங்குவதற்கு வசதியாக அரசு அலுவலர்களின் விடுமுறைகளை ஒரிசா அரசு ரத்துச் செய்துள்ளது. இதற்கிடையே வங்கதேசத்தை தாக்கிய 'அய்லா' சூறாவளியால் 62 பேர் உயிரிழந்ததாகவும், 100 பேர் வரை காணாமல் போய் உள்ளதாகவும் அந்நாட்டு அதிகாரிகள் வட்டாரங்கள் தெரிவித்தனர். (ஓ-6)

# பிரேசிலில் மழை வெள்ளத்தால்

# 49பேர் பலி; 4 இலட்சம் பேர் இடப்பெயர்வு



(பிரேசில்)

பிரேசிலில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக 4இலட்சத்து 8ஆயிரம் பேர் வீடுவாசல்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

சீரற்ற காலநிலையானது இன்னும் இரு வாரங்களுக்கு தொடரும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த மழை அனர்த்தம் காரணமாக பிரேசிலின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அந் நாட்டின் 12 மாநிலங்களில் 49 பேர் உயிரிழந்துள்ளனர். பலியானவர்களில் அநேகர் விவசாயிகளாவர்.

மேலும் வெள்ளத்தால் வீதிப் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதால், சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# பாகிஸ்தான் லாகூரில் குண்டுவெடிப்பு

# 40 பேர் பலி; 150க்கு அதிகமானோர் காயம்



(லாகூர்)

பாகிஸ்தான் லாகூர் நகரில் நேற்று புதன்கிழமை காலை நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் 40பேர் கொல்லப்பட்டதுடன், 150க்கு அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தின் உள்நாட்டுப் புலனாய்வுச் சேவைத் திணைக்களத்தின் 15 மாடிக் கட்டடத்திற்கு அருகிலேயே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதலை நோயாளர் காவு வண்டியில் சென்ற இருவர் நடத்தியுள்ளனர்.

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ஜமாட்– உட்–டவா அமைப்பின் தலைவர் முகமட் சயீட் நேற்று உயர் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவிருந்த தாக்வும், அவரைக் காப்பாற்றுவதற்காக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாமெனவும் பாகிஸ்தான ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்கள் சம்பவ இடத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு அருகிலுள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். (ஓ-6)


# நெஞ்சை உருக்கும் ஓராண்டு நினைவலைகள்

வித்தாக
தாயின் மடியில்
09.11.1980

விதியின் சதியால்
ஆண்டவன் அடியில்
28.05.2008

அமரர்

## மகேந்திரன் வரதன்



ஆண்டொன்று ஆனதடா!
தம்பி என்று சொல்ல நீ இல்லையே!
ஆசைக்கு ஒரு மருமகள் இருந்தும்
உன்னை மாமா என்று சொல்ல
நீ இல்லையே!
வேலைக்குச் சென்றாய் என்று
நாமிருந்தோம்!
வழியில் அரக்கன் உன்னைக்
கொன்று விட்டானோ!
நெருப்பு நெஞ்சில் எரியுதடா!
விழி நீரும் அதனால் சுடுகுதையா!
உன் உருவம் கண்ணில்
தெரிந்திடுமோ!

ஓராண்டு நிறைவில் கண்ணகி
அம்மாவின் தீர்த்தத்தில் நின்று
கொண்டு பூக்களால் உன்
ஆத்மா சாந்திக்கு
வேண்டி நிற்கும் உன் உயிரின் உயிரான உறவுகள்.

மீளாத்துயரில்
அப்பா, அம்மா, அக்கா, அத்தான்,
மருமகள் நஜினா, அம்மம்மா,
மாமாமார், மாமிமார், மச்சாள்,
மச்சான்மார்.


மாவடிச் சந்தி,
வட்டுமேற்கு,
வட்டுக்கோட்டை

(2777)


# உலகநாடுகளின் எதிர்ப்புக்கிடையில் வடகொரியாவில்

# சக்திவாய்ந்த அணுகுண்டு, ஏவுகணை பரிசோதனைகள்

## சீனா அச்சம் தெரிவிப்பு



(நியூயோர்க்)

''வடகொரிய சமீபத்தில் நடத்திய அணுகுண்டு சோதனை 2006 ஆம்ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மீறிய செயல்'' என ஐ.நா.பாதுகாப்பு சபை கண்டனம் தெரிவித்துள்ளது. அதேநேரத்தில், ''இந்த மிரட்டல்களுக்கு எல்லாம் அஞ்சமாட்டோம்'' என்பதை உலக நாடுகளுக்கு தெரிவிக்கும் வகையில், இரண்டு குறுகிய தூர ஏவுகணை சோதனைகளையும் வடகொரியா நேற்று முன்தினம் நடத்தியது.

கடந்த 2006 ஆம் ஆண்டில் வடகொரிய அரசு அணுகுண்டு சோதனையை நடத்தியது. இதையடுத்து, அந்நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடை உட்பட பல விதமான தடைகள் விதிக்கப்பட்டன. இருந்தும், வடகொரியா அசரவில்லை. கடந்த திங்கட்கிழமை மீண்டும் சக்தி வாய்ந்த அணுகுண்டு சோதனையை நடத்தியது.

இதற்கு, அமெரிக்கா, இந்தியா உட்பட பல நாடுகள் கண்டனம் தெரிவித்தன. இந் நிலையில், ஐ.நா.பாதுகாப்பு சபையும் வடகொரியாவின் செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது. வடகொரியா அணுகுண்டு சோதனை நடத்தியதும், பாதுகாப்பு சபையின் அவசரக் கூட்டம் நடந்தது. அதில், வடகொரியாவின் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், வடகொரியாவுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது சந்தேகமே.

### சீனா அச்சம்

தற்போதைய நிலையில், வடகொரியாவுக்கு எதிராக மேலும் சில கடுமையான நடவடிக்கைகளை எடுத்தால், அந்நாட்டின் பொருளாதாரம் சீர் குலைந்து விடும். அதனால், ஆயிரக்கணக்கானவர்கள் வடகொரியர்கள் சீனாவுக்கு தலைவர்.

அது தங்களுக்கு தலைவலியே என சீனா போன்ற நாடுகள் நினைக்கின்றன. அதனால், வடகொரியாவுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க சீனா ஆதரவு தெரிவிக்காது என்றே நம்பப்படுகிறது.

இந்த விஷயத்தில், பொறுமையாகச் செயல்பட வேண்டும் என்று உலக நாடுகளை கேட்டுக்கொண்டுள்ளது. இப்படி பல தரப்பில் இருந்தும் கண்டன குரல்கள் எழுந்தாலும், வடகொரியா அதைக் கண்டுகொள்ளவில்லை. இரண்டாவது அணுகுண்டு சோதனை நடத்திய ஒரே நாளில் நேற்று முன்தினம் இரண்டு குறுகிய தூர ஏவுகணை சோதனைகளை நடத்தியது.

இதில் ஒன்று தரையிலிருந்து வானில் உள்ள இலக்கை தாக்கக்கூடியது. மற்றொன்று தரையிலிருந்து கடலில் உள்ள இலக்கை தாக்கக் கூடியது.

130 கி.மீ. தூரத்தில் உள்ள இலக்கை தாக்கும் திறன் கொண்ட இந்த ஏவுகணைகள் வடகொரியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பரிசோதிக்கப்பட்டன. (ஓ-6)


# மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் வென்று இங்கிலாந்து அணி தொடரைக் கைப்பற்றியது

(பேர்மிங்காம்)

மாற் பிறிரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 3ஆவது ஒருநாள் போட்டியிலும் மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்தி தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட மேற்கிந்தியத்தீவுகள் அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் முதலாவது போட்டி மழை காரணமாக தடைப்பட இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.



இந்நிலையில் 3ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் பேர்மிங்காமில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி பிறிர்-ஷா ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 328 ஓட்டங்களை குவித்தது.

இதில் மாற் பிறிர் 86 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 87 ஓட்டங்களையும் ஓ வைஸ் ஷா 65 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 75 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஸ்ரொரஸ் 52, பொப்ரா 49 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரெய்லர் 3 விக்கெட்டுக்களையும் போல்லாட் 2 விக்கெட்டுக்களையும் பிரவோ. பென் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 329 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 49.4 ஓவர்களில் 270 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இதில் சந்தர்போல் 68 ஓட்டங்களையும் ராம்டீன் 45 ஓட்டங்களையும் பென் 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அன்டர்சன் 3 விக்கெட்டுக்களையும் பிரோட் 2 விக்கெட்டுக்களையும் பிரேஷ்மன், சுவான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

இப்போட்டியில் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு வழியமைத்த மாற் பிறிர் ஆட்டநாயகனாகவும் தொடரில் ஜொலித்த இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் பிரோட் தொடர் நாயகனாகவும் தெரிவானார்கள்.

# பத்தொன்பது வயதுக்குட்பட்ட

# யாழ். கிரிக்கெட் அணி அறிவிப்பு; அடுத்த வாரம் திருமலை செல்கிறது

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கிரிக்கெட்டின் அனுசரணையுடன் வடக்குகிழக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்ட 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிகளு கிடையிலான சுற்றுத் தொடர் அடுத்த வாரம் திருகோணமலையில் ஆரம்பமாகிறது.

இதில் வடக்குகிழக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய ஐந்து மாவட்ட அணிகள் மோதுகின்றன.


இச் சுற்றுத் தொடருக்காக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்ட 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இவ்வாண்டு பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் பிரகாசித்த 15 வீரர்கள் கொண்ட அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அணி விபரம் வருமாறு;

ஹரிப்பிரவீன் (அணித்தலைவர்) (யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி), மிலாண்டோ ஜெனிபர் (உப அணித்தலைவர்) (யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எஸ்.நிரோஷன் (வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), ஹரிவதனன் (யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி), நவதீபன் (யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி), விதுஷன் (யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி), கோபிகன் (யாழ்.மத்திய கல்லூரி), எட்வேட் எடின் (யாழ்.மத்திய கல்லூரி), கஜீபன் (யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி), பிரணவன் (யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஜேம்ஸ் ஜான்ஸன் (யாழ்.மத்திய கல்லூரி), சஜீந்திரன் (யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி), தீபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), நிகேதன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), தஜீகன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

# மைக் டைசனின் மகள் பரிதாப மரணம்



குத்துச்சண்டை வீரர் மைக் டைசனின் நான்கு வயது மகள் வீட்டில் இருந்த உடற்பயிற்சி சாதனம் ஒன்றின் கேபிளில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

முன்னாள் உலக ஹெவிவெயிட் குத்துச்சண்டை சம்பியன் மைக் டைசனிற்கு பல மனைவிமார். அவர்களின் மூலம் இவருக்கு ஜெனா (வயது 20), மைக்கே (வயது 18), ராய்னா (வயது 13), அமிர் (வயது 11), மைகுல் (வயது 07) மற்றும் எக்சோடஸ் (வயது 04) என ஆறு குழந்தைகள் உள்ளனர்.

தற்போது டைசன் பீனிக்ஸ் நகரில் மைகுல் மற்றும் எக்சோடஸ் ஆகிய இரண்டு குழந்தைகள் உடன் வசித்து வருவதாக தெரிகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மைக் டைசனின் கடைசி குழந்தையான எக்சோடஸ் வீட்டிலிருந்த உடற்பயிற்சி அறைக்குள் சென்று விளையாடிக் கொண்டிருந்த சமயம் அங்கிருந்த உடற்பயிற்சி சாதனம் ஒன்றின் கேபிள் அந்தச் சிறுமியின் கழுத்தைச் சுற்றி இறுக்கியது. இதில் குழந்தை அந்த இடத்திலேயே மயக்கமுற்றார்.

கழுத்தில் கேபிள் இறுக்கி அவள் தொங்கிக் கொண்டிருப்பதை பார்த்த அவளது சகோதரன் மைகுல் தனது தாயாரிடம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து ஓடிச் சென்று சிறுமியை மீட்ட தாய் மருத்துவமனைக்கு கொண்டு சென்றாலும் மருத்துவர்கள் குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்துவிட்டனர்.

# ஐ.பி.எல். அணிகளுக்கு சுப்பர் இலாபம்

(புதுடில்லி)

தென்னாபிரிக்காவில் ஐ.பி.எல். 2ஆவது இருபது-20 தொடர் நடைபெற்றது. இதில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி சம்பியனானது.

இத் தொடரில் ஒவ்வொரு அணிக்கும் தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமத்தின் பங்குத்தொகையாக ரூபாய் 67.50 கோடி கிடைத்துள்ளது.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.) ரூபாய் 477 கோடி வருமானம் பெற்றுள்ளது. ராஜஸ்தான் றோயல்ஸ் அணி டிக்கெட் விற்பனையை சேர்த்து அதிகபட்சமாக ரூபாய் 35.1 கோடி இலாபம் சம்பாதித்துள்ளது.

இந்த முறை கடைசி இடம் பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி டிக்கெட் விற்பனை மூலம் ரூபாய் 25.8 கோடி வருமானம் பெற்றுள்ளது.

பரிசுத் தொகையாக முதலிடம் பெற்ற டெக்கான் அணிக்கு ரூபாய் 4.8 கோடி, 2ஆம் இடம் பெற்ற பெங்களூர் அணிக்கு 2.4 கோடி, அரையிறுதியில் தோற்ற சென்னை, டில்லி அணிகளுக்கு தலா 1.2 கோடி, 5ஆம் இடம் பெற்ற பஞ்சாப் அணிக்கு ரூபாய் 80 இலட்சம், 6ஆவது இடம் பிடித்த ராஜஸ்தான் அணிக்கு ரூபாய் 70 இலட்சம், 7 ஆவது இடம் பெற்ற மும்பை அணிக்கு ரூபாய் 50 இலட்சம், 8 ஆவது இடம் பெற்ற கொல்கத்தாவுக்கு ரூபாய் 40 இலட்சம் அளிக்கப்பட்டன. கணக்குகள் பார்த்த பின் அனைத்து அணிகளுக்கும் கிடைத்த இலாபம் பற்றி விரிவாக தெரிவிக்கப்படவுள்ளது.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... (83)



*அத்துடன் சர்வதேச ரீதியில் டெஸ்ட் கிரிக்கெட்டில் 27 போட்டிகளில் 100ஆவது விக்கெட்டை வீழ்த்திய 64ஆவது வீரராக முரளிதரன் இச்சாதனையை நிகழ்த்தினார்.*

*குறைந்த போட்டிகளில் 100ஆவது டெஸ்ட் விக்கெட்டை வீழ்த்திய சாதனை வீரராக இன்றுவரை திகழ்பவர் இங்கிலாந்து அணியின் லோமான்.*

*இவர் 1896 ஆம் ஆண்டு 16 போட்டிகளில் தனது 100ஆவது டெஸ்ட் விக்கெட்டை வீழ்த்தியுள்ளார்.*

*இதேவேளை இரண்டாவது டெஸ்டின் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 205 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.*

பாலா


*இதன் மூலம் நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.*

*இந்நிலையில் நியூசிலாந்து அணியுடன் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை அணி விளையாடியது.*

*(பயணிக்கும்)*



# எண் விளையாட்டு-79



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதி தான்.

அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக் கப்பட்டுள் ளது.

22.05.2009 பகுதிக்கான விடை



1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

## பிரபாகரனுக்கு என்ன நடந்தது?...

அமைப்பின் சர்வதேச தொடர்புகள் துறைத் தலைவரான செல்வராசா பத்மநாதன் தெரிவித்தது கூட மேலோட்டமாக பார்த்தபோது தவிர்க்க முடியாததொன்று நடந்து விட்டது என்பதனை அந்த இயக்கத்தினர் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றுதான் தோன்றுகின்றது.

அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் பிரபாகரனின் பெயரை குறிப்பிடாவிட்டாலும் தமது இயக்கத்தின் ஒப்பிலாத் தலைவரும் தலைமைத் தளபதியும் வீரமரணம் அடைந்துவிட்டார் என்று மட்டுமே குறிப்பிட்டிருந்தனர்.

அதேநேரம் 30 ஆண்டுகளாக நடைபெற்றுவந்த ஆயுதப் போராட்டம் முடிபுக்கு வந்துவிட்டதாகவும் அந்த அமைப்பு ஜனநாயக நீரோட்டத்தில் இணையும் என்றும் பத்மநாதன் பி.பி.சியின் தமிழோசையிடம் தெரிவித்திருந்தார்.

இதன் மூலம் இலங்கையிலுள்ள சிறுபான்மை தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அடையப் பாடுபடப்போவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால் இதற்கெல்லாம் பிறகு விடுதலைப் புலிகள் தரப்பு என்று நம்பப்படும் சிலரிடம் இருந்து இந்த அறிக்கைக்கு எதிரான அறிக்கைகள் வந்தன..

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானது என்று அறியப்படும் தமிழ்நெற் இணையத்தளமானது விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவை மேற்கோள்காட்டி அந்த அமைப்பின் தலைமை பாதுகாப்பாக இருப்பதாகவும் சரியான தருணத்தில் மீண்டும் தலைமையின் செயற்பாடுகள் தெரியவரும் என்றும் செய்தி வெளியிட்டது.

இது மட்டுமல்லாமல் விடுதலைப் புலிகளின் வெளிநாடு வாழ் மக்கள் தொடர்பான துறை தலைமையின் வெளிப்படையான அனுமதியில்லாமல் எந்தக் கருத்தையும் வெளியிட முடியாது என்று தெரிவித்துள்ளதாக தமிழ்நெற் மேலும் ஒரு செய்தியினை வெளியிட்டது. இதில் பிரச்சினை என்னவென்றால் இவர்களால் தலைமை என்று கூறப்படும் தலைவர்கள் இறந்துவிட்டதாக நம்பப்படுகின்றது.

மேலும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறை தலைவரான பொட்டு அம்மான் மோதல் நடந்த இறுதிக் காலகட்டத்தில் காணப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

இலங்கை ஆய்வாளர்களின் கருத்துக்களின் படி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இந்த வெளிநாடுவாழ் மக்கள் தொடர்பான துறை என்பது இதுவரை கேள்விப்படாத ஒன்றாகவே இருந்துள்ளது.

மேலும் பல நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் பெரும்பாலானவர்கள் பிரபாகரன் அவர்கள் இறந்துவிட்டார் என்பதனை நம்ப மறுக்கிறார்கள்.

எப்படி இருந்தாலும் பிரபாகரன் அவர்கள் கொல்லப்பட்டுவிட்டது தொடர்பான செய்தியை ஏற்பதா இல்லையா என்பது தொடர்பிலும் அடுத்து எப்படி செயற்படுவது என்பது தொடர்பிலும் விடுதலைப் புலிகள் அமைப்பினரிடையே பிளவுகள் தோன்ற ஆரம்பித்துள்ளது போல தெரிகிறது.

அவரது மரணம் தொடர்பான குழப்பங்களும் தொடர்ந்துகொண்டே இருக்கின்ற நிலையில் இது தொடர்பில் தற்போது இரண்டு விதமான கருத்துக்களைக் கொண்டுள்ளவர்களின் நிலைப்பாடு வரும் நாட்களில் இறுதியான ஒரு வடிவம் பெறக் கூடும் என்று தோன்றுகிறது.

ஒன்று பத்மநாதனின் வழியைப் பின்பற்றுவது. அதாவது பிரபாகரன் மரணம் அடைந்துவிட்டார் என்பதனை ஏற்றுக்கொண்டு ஜனநாயக ரீதியில் ஏதோ ஒரு வழியில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது.

மற்றையது தமிழ்நெற் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல பிரபாகரன் கொல்லப்படவில்லை என்றும் அவர் வெற்றி கொள்ள முடியாதவர் என்கின்ற கருத்தை முன்னெடுத்துச் சென்று போராட்டத்தை தொடர்வதாகும்.

தற்போதைய கேள்வி என்னவென்றால் இந்த இரண்டு கருத்துக்களில் எது பலம் பெறும் என்பதே. எப்படி இருந்தாலும் இனி விடுதலைப் புலிகள் எந்த வகையிலும் தலை தூக்குவதை இலங்கை அரசு அனுமதிக்கப் போவதில்லை என்பதனை இலங்கை பாதுகாப்புச் செயலர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதே கருத்தை வலியுறுத்தியிருக்கும் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத்தின் பலத்தை தற்போதிருக்கும் இரண்டு இலட்சம் பேரிலிருந்து மூன்று இலட்சம் பேராக உயர்த்த தான் விரும்புவதாக அரச தொலைக் காட்சி ஒன்றில் தெரிவித்துள்ளார். (எ-14)

## கே.பியை...

மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை அரசும் இந்திய அரசும் விடுத்த கோரிக்கையையடுத்தே கே.பியை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை சர்வதேச பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

## நாட்டில்...

டெங்கு காய்ச்சல் காரணமாக இது வரையில் 75 பேர் மரணமாகியுள்ளதாகவும் 52 ஆயிரம் பேருக்கு இந்தக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் டெங்கு நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்ட போதிலும் கண்டி, கம்பளை, கேகாலை, குருநாகல், களுத்துறை, மாத்தளை, ஹம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, மாத்தறை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இந் நோய் தீவிரமாக பரவுவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. தற்போதுள்ள காலநிலை நுளம்புகள் பெருகுவதற்கு சாதகமாக உள்ளதால் பொது மக்கள் தமது சூழலை தூய்மையாக வைத்து நுளம்புப் பெருக்கத்தை தடுக்க உதவ வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பிரபாகரனுடன்...

தென் மாநில அரசியல் தலைவர்கள் அவருடன் பேசியிருப்பதும் சிம் அட்டை மூலம் தெரிய வந்துள்ளது. அந்த தலைவர்கள் யார்? எந்தெந்த திகதிகளில் பேசி உள்ளனர். எந்த எண்ணில் இருந்து பேசி இருக்கிறார் போன்ற விபரங்களை சேகரித்து வருகின்றனர்.

இது பற்றி அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறும் போது, பிரபாகரன் போன் சிம் கார்டு மூலம் அவருக்கு யார்-யாருடன் தொடர்பு இருந்தது என்பதை கண்டு பிடித்துள்ளோம்.

தென் இந்தியாவின் முக்கிய தலைவர்கள் அவருடன் பேசி இருப்பது தெரியவந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ச-5)

## சர்வதேச சட்டத்திற்கு...

பொலிஸாரிடமோ அல்லது இராணுவத்தினரிடமோ சரணடைவதற்கான காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது இராணுவ முகாம்களிலோ சென்று சரணடையுமாறு அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தனிநாட்டுக் கோரிக்கையினை வேண்டி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நாட்டுக்குள் வியாபித்திருந்த விடுதலைப் புலிகள் இயக்கம் தற்போது முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவ்வியக்கத்தின் தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களும் வன்னியில் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான போர் நடவடிக்கைகளின்போது கொல்லப்பட்டனர்.

அத்துடன் நாடு முழுவதிலும் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் பல்வேறு பிரதேசங்களிலும் தங்கியிருந்த புலி உறுப்பினர்கள் பலர் தற்போது பாதுகாப்புத் தரப்பினரிடம் அன்றாடம் சரணடைந்து கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் கடந்த சில தினங்களில் மட்டும் 9 ஆயிரத்து 100 விடுதலைப் புலி உறுப்பினர்கள் பாதுகாப்புத் தரப்பினரிடம் சரணடைந்துள்ளனர்.

இந்நிலையில் ஏற்கனவே சரணடைந்தவர்களையும் சரணடைய இருப்பவர்களையும் அவர்கள் அனைவரையும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் பிரகாரம் கவனிப்பதற்கும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய புனர்வாழ்வு அளிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றுள்ளது. (ச-5)

## சர்வதேச தரத்திற்கு...

பார்வையிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் ஐ.நா மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதி ஆணையாளர் ஜோன் ஹோம்ஸ மற்றும் பொதுச்செயலாளர் பான் கீ மூனின் அரசியல் விவகாரங்களிற்கான பொறுப்பாளர் பி.லின் பாஸ்கோ ஆகியோர் ஊடகவியலாளர்களை சந்தித்தனர்.

அவர் தனது விஜயத்தின் போது வவுனியாவில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியிருக்கும் நிவாரண கிராமங்களிற்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் பார்வையிட்டார்.

அங்கே அம் மக்களிற்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்த போதிலும் பல தேவைகள் நிறைவேற்றப்படவேண்டியுள்ளது. குறிப்பாக தங்குமிடம்.

சில கூடாரங்களில் அதிகளவு மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் கூடாரங்களை அமைப்பதற்கு அதிகளவு நிலப்பரப்பு தேவையாகவுள்ளது என ஜோன் ஹோம்ஸ் ஊடகவியலாளர்களிற்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன் இடம்பெயர்ந்த மக்களிற்கு பல வகையான உணவுகள், குடிநீர் அடிப்படை சுகாதார வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிவாரணக் கிராமங்களில் சிறிய அளவிலேயே போசணைக் குறைபாடு நிலவுகிறது. போசணைக் குறைபாட்டினால் மக்கள் இறப்பாக நாம் அறியவில்லை. ஏனெனில் நிவாரணக் கிராமங்களின் தரம் மேலும் உயர்த்தப்பட வேண்டியுள்ள போதிலும் தற்போது அங்கே வசதிகள் போதுமானதாக உள்ளன எனவும் தெரிவித்தார்.

குறுகிய காலத்திற்கு முக்கிய அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், வசதிகளை ஏற்படுத்துவதில் இன்னமும் பாரியளவு முன்னேற்றம் தேவை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச-5)

## கஞ்சிகுடிச்...

தகவல்களின்படி குறிப்பிட்ட 11சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அதேவேளை படையினருக்கு எத்தகைய சேதங்களும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தின் பின் ரி-56 ரக துப்பாக்கிகள் 5, கிளைமோர்க் குண்டுகள் 20, கைக் குண்டுகள் 2, மிதிவெடிகள் 2 மற்றும் ஒரு தொகுதி மருந்துப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

(ச-3,5,14)

## ஐ.நா. மனித உரிமைகள்...

இலங்கை போரின் பொழுது இலங்கை படைகளாலும் விடுதலைப்புலிகளாலும் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தக் கோரியும் மற்றும் இலங்கையில் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு உதவி நிறுவனங்கள் சென்று வர தடையற்ற அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கோரியும் ஐரோப்பிய நாடுகள் உட்பட 17 நாடுகளால் கிட்டத்தட்ட இலங்கை அரசாங்க கருத்துக்கு முரணான தீர்மானம் ஒன்று இந்த சந்திப்பில் முன் வைக்கப்பட்டது.

இறுதியாக இந்த தீர்மானத்தில் இணக்கத்தை காணும் வகையில் சில மாற்றங்களுடன் அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

ஆயினும் அந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. அந்த தீர்மானத்துக்கு எதிராக 22 வாக்குகளும் ஆதரவாக 17 வாக்குகள் அளிக்கப்பட்டன. 8 நாடுகள் அந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்வில்லை.

இதேவேளை ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான விசேட அமர்வு கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்றன. நேற்றைய அமர்வின் முடிபில் இலங்கை அரசாங்கம் பிரேரணை ஒன்றை முன் வைத்தது. அந்த பிரேரணைக்கே 29 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன.

பயங்கரவாதத்தை தோற்கடித்தமை தொடர்பில் சர்வதேசத்தின் பாராட்டு இலங்கைக்கு கிடைக்க வேண்டும் மற்றும் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்த சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட விடயங்களே இந்த பிரேரணையில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அமர்வின் இடைநடுவில் ஐரோப்பிய நாடுகள் இலங்கை தொடர்பான பிரேரணை ஒன்றை முன் வைத்துள்ளன. ஆனால் அந்தப் பிரேரணை விவாதத்துக்கு உட்படுத்தப்படவில்லை. இந் நிலையில் அமர்வின் இறுதியில் இலங்கை முன்வைத்த பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரேரணைக்கு சீனா, இந்தியா, ரஷ்யா, கியூபா, அல்ஜீரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், பூட்டான், பங்களாதேஷ் நிக்கரகுவா, பொலிவியா, பாகிஸ்தான் நேபாளம், இந்தோனேசியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட 29 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன.

பிரேரணைக்கு பிரிட்டன், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, நெதர்லாந்து, மெக்சிக்கோ, சிலி, கனடா, இத்தாலி உள்ளிட்ட 12 நாடுகள் எதிராக வாக்களித்துள்ளன.

(ச-5)


## மரண அறிவித்தல்

## செல்லையா ஆறுமுகம்



கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலம் சென்ற செல்லையா சின்னம்மாவின் அன்பு மகன் செல்லையா ஆறுமுகம் 23.05.2009 அன்று வவுனியாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலம் சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும்- காலம் சென்றவர்களான கந்தையா (வைத்தியர்), லட்சுமி அவர்களின் மருமகனும் ஆனந்தராசா, ஆனந்தக்குமார் (நோர்வே), சாந்தி வைகுந்தன் (இந்தோனேசியா), ஆனந்தஈஸ்வரன் (W.F.P. கோப்பாய்), ஆனந்தசிவம் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தஜோதி, கலாதுசியந்தி, கந்தசாமி, இந்துமதி ஆகியோரின் மாமனாரும் லட்சுமி (அமரர்), செல்லம் (அமரர்), சிற்றம்பலம் (ஓய்வு பெற்ற மின்சார ஊழியர்), ஆகியோரின் சகோதரரும் மதுமிதா, ஆகாஷ், அகிலாஷ், சோபிதா, சௌமியா, ஸ்ரீபன், எழிலரசி, கம்சனா, யதீசன், ரிசாத், பவினாயா, அபிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 25.05.2009 திங்கள் அன்று வவுனியாவில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத்தருகிறோம்.

முதலி கோவிலடி,
கரணவாய் கிழக்கு ,
கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்.

(C-2509)

## முதலாம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 15 07 1972 | இறப்பு 28 05 2008



அமரர்

**பரநிருபசிங்கம் தேவகுமார்**

(அகில இலங்கை சமாதான நீதவான்;
ஊடகவியலாளர் சக்தி TV,சக்தி FM)

எங்கள் குடும்ப ஒளிவிளக்கே
நீ மறைந்து ஓராண்டு சென்றாலும்
என்றும் எம் நினைவில்
நீ மறையாமல் இருப்பாய்!

-குடும்பத்தினர்

(C-2511)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.